


# சேலம் மாநகராட்சி

## நிதி நிலை அறிக்கை

## 2008 - 2009

# சேலம் மாநகராட்சி

## 2008 – 2009 ஆம் ஆண்டுக்கான
## நிதி நிலை அறிக்கை

வணக்கத்திற்குரிய சேலம் மாநகராட்சி மேயர்

திருமதி **ஜெ. ரேகா பிரியதர்ஷினி, எம்.ஏ., எம்.பில்.,**

அவர்களின்

2008–2009 ஆம் ஆண்டிற்கான

சேலம் மாநகராட்சியின்

நிதி நிலை அறிக்கை மீதான உரை

அனைவருக்கும் எனது வணக்கம்,

91.34 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 7,77,820 மக்கள் தொகையும் கொண்ட சேலம் மாநகராட்சியின் லட்சியம் 'எழில்மிகு சேலம்' என்ற இலக்கினை எட்டுவதே ஆகும். அந்த லட்சியத்தை அடைவதற்கும், தமிழகத்தின் முதன்மை மாநகராட்சி என்ற பெருமையை பெறுவதற்கும், தொலைநோக்கு சிந்தனையில் திட்டங்களை தீட்டி வருகிறோம். இந்தத் திட்டங்களையும், அதற்கான நிதி ஆதாரங்களையும் தாயுள்ளத்தோடு வழங்கி வழி நடத்திக் கொண்டிருக்கும் **மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்** அவர்களுக்கும், **மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்** அவர்களுக்கும், இந்தத் திட்டங்களை அறிமுகப்படுத்தி அவைகளை செயலாக்கத்திற்குக் கொண்டுவர உறுதுணையாக நின்று, சேலம் மாநகர மக்களின் அன்பை பெற்றுள்ள **மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்** அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாநகர மக்களுக்கு அவசியமான பல அற்புதமான திட்டங்களை அறிவித்திருந்தோம். பாதாள சாக்கடை, தனிக் குடிநீர் திட்டம், எரிவாயு தகனமேடை, திருமணி முத்தாறு இரண்டாம் கட்ட சீரமைப்பு, நவீன இறைச்சிக் கொட்டில் என அத்தனைத் திட்டங்களும் செயல்படும் நிலைக்கு வந்துள்ளதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. கடந்த 14.09.2007 அன்று **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்** அவர்களின் தலைமையில், **மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்** அவர்களின் முன்னிலையில், சேலத்தில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அரசு விழாவில் **மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்** அவர்களால் அத்தனைத் திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டப்பட்டது.

அதே வேகத்தோடும், எழுச்சியோடும் நமது கழக அரசின் துணையோடும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் சீரிய வழிகாட்டுதலோடும், இனி வருகின்ற காலங்களிலும் மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தரவும், கட்டமைப்பு வசதிகளை மேலும் ஏற்படுத்தி வழங்கிடவும் திட்டமிட்டுள்ளோம். அதற்காக தற்போது மேற்கொண்டுள்ள பணிகளுக்கும், திட்டமிடப்பட்டுள்ள இதர பணிகளுக்காகவும் மாநகராட்சி நிதி ஆதாரங்கள், மத்திய, மாநில அரசுகள் மற்றும் அரசின் சார்பு நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து பெறப்படவிருக்கின்ற நிதி ஆதாரங்கள் போன்ற விவரங்களை இம்மாமன்றத்தின் முன்பாக பணிவுடன் தாக்கல் செய்கிறேன்.

நயன்ஈன்று நன்மை பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

நன்மையான பயனைத் தரக்கூடிய, நல்ல பண்பிலிருந்து விலகாத சொற்கள் அவற்றைக் கூறுவோருக்கும், கேட்போருக்கும் இன்பத்தையும் நன்மையையும் உண்டாக்கக் கூடியவையாகும். அந்த வகையில் அய்யன் வள்ளுவர் வழியில் சேலம் மாநகர மக்களுக்கு நன்மையான, நல்ல பயன்களைத் தரக்கூடிய பண்பான சொற்களால் 2008–2009ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை பணிவுடன் தாக்கல் செய்கிறேன்.

பெருமைமிகு இந்தக் கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள வணக்கத்திற்குறிய துணை மேயர் அவர்களுக்கும், மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கும், மாநகராட்சி மன்ற ஆளும் கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாநகராட்சி மண்டலக் குழு தலைவர்களுக்கும், மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர்களுக்கும், மாமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும், இம்மாநகராட்சியின்பால் பெரிதும் அக்கறை கொண்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர், மாநகராட்சி அலுவலர்கள், பத்திரிக்கையாளர்கள் மற்றும் தொலைக்காட்சியினர் அனைவரையும் வரவேற்கிறேன்.

தமிழினத்தின் தலைவர் **மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்** அவர்கள், **மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் திரு மு.க.ஸ்டாலின்** அவர்கள், சேலம் மாவட்ட மக்களின்பால் பெரிதும் அன்பு கொண்டு மாவட்டத்திற்கும், குறிப்பாக சேலம் மாநகர வளர்ச்சிக்கும் அர்ப்பணிப்பு உணர்வோடு அரும்பாடுபட்டுவரும் **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு வீரபாண்டியார்** அவர்கள் ஆகியோரின் நல்லாசியுடன் 2007–2008ஆம் ஆண்டின் திருத்திய நிதி நிலை அறிக்கையையும், 2008 – 2009ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையையும் இம்மாமன்றத்தின் முன் பணிவுடன் தாக்கல் செய்கிறேன்.

# சேலம் மாநகராட்சி

## 2007–2008 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம்

## வருவாய் கணக்கு

| வ. எண் | விபரம் | வரவுகள் (ரூபாய் இலட்சத்தில்) | வ. எண் | விபரம் | செலவுகள் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | சொத்து வரி | 1,800.00 | 1 | மொத்த நிர்வாகச் செலவு | 3,634.56 |
| 2 | தொழில் வரி | 225.00 | 2 | பொது நிர்வாகப் பணிகள் | 2,700.00 |
| 3 | கேளிக்கை வரி | 140.00 | 3 | குடிநீர் பராமரிப்பு | 1,429.20 |
| 4 | முத்திரைக் கட்டணம் | 1,020.00 | 4 | தெரு விளக்கு பராமரிப்பு | 550.00 |
| 5 | சொத்துக்கள் மூலம் வரவு | 730.68 | 5 | பொது சுகாதாரம் மற்றும் மலேரியா | 500.00 |
| 6 | குடிநீர் விநியோக வரவு | 1,300.00 | 6 | கல்வி | 80.00 |
| 7 | குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை | 190.00 | 7 | வாகனங்கள் பராமரிப்பு | 260.80 |
| 8 | கட்டணங்கள் மூலம் வரவு | 500.00 | 8 | கட்டிடங்கள் மற்றும் சாலை பராமரிப்பு | 77.00 |
| 9 | அரசு நிதி உதவி மற்றும் மானியம் | 3,289.32 | 9 | இதர செலவினம் | 168.44 |
| 10 | இதர வரவுகள் | 205.00 | | | |
| | மொத்த வரவினம் | 9,400.00 | | மொத்த செலவினம் | 9,400.00 |

# சேலம் மாநகராட்சி
## 2007–2008 ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம்
## மூலதனக் கணக்கு

| வ. எண் | விபரம் | வரவுகள் (ரூபாய் இலட்சத்தில்) | வ. எண் | விபரம் | செலவுகள் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | நமக்கு நாமே திட்டம் | 20.00 | 1 | பொது பணிகள் | 192.65 |
| 2 | சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மானியம் | 110.00 | 2 | நமக்கு நாமே திட்டம் | 20.00 |
| 3 | சிறப்பு சாலைக்கடன் மற்றும் மானியம் | 1,100.00 | 3 | சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மானியம் | 110.00 |
| 4 | மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி பணி ஊக்க நிதி | 44.00 | 4 | சிறப்பு சாலைக்கடன் மற்றும் மானியம் | 550.00 |
| 5 | வெள்ள நிவாரணம் | 200.00 | 5 | மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி பணி ஊக்க நிதி | 44.00 |
| 6 | வாம்பே திட்டம் | 20.00 | 6 | வெள்ள நிவாரணம் | 200.00 |
| 7 | மழைநீர் சேகரிப்பு மானியம் | – | 7 | வாம்பே கழிப்பிடம் | 20.00 |
| 8 | குடிநீர் வினியோகம் | 664.00 | 8 | மழைநீர் சேகரிப்பு பணிகள் | – |
| 9 | திடக்கழிவு மேலாண்மை | 153.00 | 9 | குடிநீர் வழங்கல் திட்டம் | 664.00 |
| 10 | திருமணி முத்தாறு திட்டம் நிலை – II | 500.00 | 10 | திடக்கழிவு மேலாண்மை | 153.00 |
| 11 | பாதாள சாக்கடைத் திட்டம் | 50.40 | 11 | திருமணிமுத்தாறு திட்டம் நிலை – II | 300.00 |
| 12 | தனிக் குடிநீர் திட்டம் | – | 12 | பாதாள சாக்கடைத் திட்டம் | 15.00 |
| 13 | நவீன இறைச்சிக் கூடம் | 10.00 | 13 | தனிக்குடிநீர் திட்டம் | – |
| 14 | இடுகாடு, சுடுகாடு தகன மேடை | 20.00 | 14 | நவீன இறைச்சிக் கூடம் | 10.00 |
| 15 | ஐ.எச்.எஸ்.டி.பி. | – | 15 | இடுகாடு, சுடுகாடு தகன மேடை | 20.00 |
| 16 | யு.ஐ.டி.எஸ்.எஸ்.எம்.டி. | – | 16 | ஐ.எச்.எஸ்.டி.பி. | – |
| 17 | போக்குவரத்து அபிவிருத்தி (CTTS) திட்டம் | 40.00 | 17 | யு.ஐ.டி.எஸ்.எஸ்.எம்.டி. | – |
| 18 | பேருந்து நிலைய அபிவிருத்தி மானியம் | 100.00 | 18 | போக்குவரத்து அபிவிருத்தி (CTTS) திட்டம் | 40.00 |
| 19 | முன்பணம் | 100.00 | 19 | பேருந்து நிலைய அபிவிருத்தி மானியம் | 100.00 |
| 20 | வைப்புத் தொகை | 110.00 | 20 | கல்வி | 208.00 |
| | | | 21 | தெருவிளக்கு | 120.00 |
| | | | 22 | கடன் திருப்பிச் செலுத்துதல் | 264.75 |
| | | | 23 | முன்பணம் | 100.00 |
| | | | 24 | வைப்புத் தொகை | 110.00 |
| | மொத்தம் | 3,241.40 | | மொத்தம் | 3,241.40 |

ஆக மொத்தம் வரவு – ரூ. 12,641.40 இலட்சங்கள்

ஆக மொத்தம் செலவு – ரூ. 12,641.40 இலட்சங்கள்

# சேலம் மாநகராட்சி
## 2008–2009 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம்
## வருவாய் கணக்கு

| வ. எண் | விபரம் | வரவுகள் (ரூபாய் இலட்சத்தில்) | வ. எண் | விபரம் | செலவுகள் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | சொத்து வரி | 2,000.00 | 1 | மொத்த நிர்வாகச் செலவு | 3,848.81 |
| 2 | தொழில் வரி | 300.00 | 2 | பொது நிர்வாகப் பணிகள் | 2,594.50 |
| 3 | கேளிக்கை வரி | 200.00 | 3 | குடிநீர் பராமரிப்பு | 1,573.00 |
| 4 | முத்திரைக்கட்டணம் | 1,100.00 | 4 | தெரு விளக்கு பராமரிப்பு | 605.20 |
| 5 | சொத்துக்கள் மூலம் வரவு | 740.00 | 5 | பொது சுகாதாரம் மற்றும் மலேரியா | 621.04 |
| 6 | குடிநீர் விநியோக வரவு | 1,650.00 | 6 | கல்வி | 116.05 |
| 7 | குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை | 260.00 | 7 | நூலக வரி | 150.00 |
| 8 | கட்டணங்கள் மூலம் வரவு | 550.00 | 8 | வாகனங்கள் பராமரிப்பு | 313.44 |
| 9 | அரசு நிதி உதவி மற்றும் மானியம் | 3,500.00 | 9 | கட்டிடங்கள் மற்றும் சாலை பராமரிப்பு | 93.50 |
| 10 | இதர வரவுகள் | 226.00 | 10 | இதர செலவினம் | 183.35 |
| | மொத்த வரவினம் | 10,526.00 | | மொத்த செலவினம் | 10,098.89 |

# சேலம் மாநகராட்சி
## 2008–2009 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டம்
## மூலதனக் கணக்கு

| வ. எண் | விபரம் | வரவுகள் (ரூபாய் இலட்சத்தில்) | வ. எண் | விபரம் | செலவுகள் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | நமக்கு நாமே திட்டம் | 25.00 | 1 | பொது பணிகள் | 900.00 |
| 2 | சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மானியம் | 150.00 | 2 | மக்கள் குறை தீர்க்கும் நாள் நிவாரணப் பணி | 100.00 |
| 3 | சிறப்பு சாலைக்கடன் மற்றும் மான்யம் | – | 3 | நமக்கு நாமே திட்டம் | 15.35 |
| 4 | மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி பணி ஊக்க நிதி | 44.00 | 4 | சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மானியம் | 150.00 |
| 5 | வெள்ள நிவாரணம் | 100.00 | 5 | சிறப்பு சாலைக்கடன் மற்றும் மானியம் | 412.00 |
| 6 | வாம்பே திட்டம் | 20.00 | 6 | மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி பணி ஊக்க நிதி | 44.00 |
| 7 | மழைநீர் சேகரிப்பு மானியம் | 50.00 | 7 | வெள்ள நிவாரணம் | 100.00 |
| 8 | குடிநீர் விநியோகம் | 500.00 | 8 | வாம்பே குடியிருப்பு | 75.00 |
| 9 | திடக்கழிவு மேலாண்மை | 3,735.00 | 9 | மழைநீர் சேகரிப்பு பணிகள் | 50.00 |
| 10 | திருமணி முத்தாறு திட்டம் நிலை – II | 2,835.00 | 10 | குடிநீர் விநியோகம் | 500.00 |
| 11 | பாதாள சாக்கடைத் திட்டம் | 5,000.00 | 11 | திடக்கழிவு மேலாண்மை | 3,735.00 |
| 12 | தனிக் குடிநீர் திட்டம் | 5,000.00 | 12 | திருமணிமுத்தாறு திட்டம் நிலை – II | 3,150.00 |
| 13 | நவீன இறைச்சிக் கூடம் | 10.00 | 13 | பாதாள சாக்கடைத் திட்டம் | 4,250.00 |
| 14 | இடுகாடு, சுடுகாடு தகன மேடை | 20.00 | 14 | தனிக்குடிநீர் திட்டம் | 4,250.00 |
| 15 | ஐ.எச்.எஸ்.டி.பி. | 500.00 | 15 | நவீன இறைச்சிக் கூடம் | 68.00 |
| 16 | யு.ஐ.டி.எஸ்.எஸ்.எம்.டி. | 3,735.00 | 16 | இடுகாடு, சுடுகாடு தகன மேடை | 98.00 |
| 17 | போக்குவரத்து அபிவிருத்தி | 140.00 | 17 | ஐ.எச்.எஸ்.டி.பி . | 500.00 |
| 18 | முன்பணம் | 200.00 | 18 | யு.ஐ.டி.எஸ்.எஸ்.எம்.டி | 3,735.00 |
| 19 | வைப்புத் தொகை | 210.00 | 19 | போக்குவரத்து அபிவிருத்தி | 124.50 |
| | | | 20 | கல்வி | 170.00 |
| | | | 21 | தெருவிளக்கு | 45.90 |
| | | | 22 | கடன் திருப்பிச் செலுத்துதல் | 464.00 |
| | | | 23 | முன்பணம் | 200.00 |
| | | | 24 | வைப்புத்தொகை | 210.00 |
| | மொத்தம் | 22,274.00 | | மொத்தம் | 23,346.75 |
| | ஆக மொத்தம் | 32,800.00 | | ஆக மொத்தம் | 33,445.64 |

பற்றாக்குறை – ரூ. 645.64 இலட்சங்கள்

# சேலம் மாநகராட்சி
## கல்வி நிதி
## 2008–2009ம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு

| வரவு | (ரூபாய் இலட்சத்தில்) | செலவு | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| கல்வி வரி | 283.68 | பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் கூடுதல் கட்டிடங்கள் | 170.00 |
| முதலீடுகள் மீதான வட்டி மற்றும் வங்கி மூலம் வட்டி | 2.37 | பள்ளி வாடகை | 15.30 |
| | | 10 வது, 12 வது வகுப்பு இறுதித் தேர்வில் சிறப்பிடம் பிடித்த மாணவ, மாணவியர்களுக்கு பரிசு மற்றும் அரசின் கார்பஸ் நிதிக்கு ஒதுக்கீடு | 5.00 |
| | | மின் கட்டணம் | 0.75 |
| | | 5–வது ஊதியக்குழு நிலுவை | 95.00 |
| மொத்தம் | 286.05 | மொத்தம் | 286.05 |

## 2007–2008ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதி நிலை விவரங்கள்

**வருவாய் கணக்கு**

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | – | ரூ. 9,400.00 இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | – | ரூ. 9,400.00 இலட்சங்கள் |

**மூலதனக் கணக்கு**

| | | |
|---|---|---|
| மொத்த வரவினம் | – | ரூ. 3,241.40 இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | – | ரூ. 3,241.40 இலட்சங்கள் |

| | | |
|---|---|---|
| ஆக மொத்த வரவு | – | ரூ. 12,641.40 இலட்சங்கள் |
| ஆக மொத்த செலவு | – | ரூ. 12,641.40 இலட்சங்கள் |

2007–2008ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பற்றாக்குறை ரூ. 482.00 இலட்சங்கள். மாநகராட்சியின் வருவாய் மற்றும் அரசு நிதியுதவிகள் மூலமாக நேர் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 2008–2009ஆம் ஆண்டுக்கான நிதி நிலை விவரங்கள்

### வருவாய் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மொத்த வரவினம் | – | ரூ. 10,526.00 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | – | ரூ. 10,098.89 | இலட்சங்கள் |

### மூலதனக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மொத்த வரவினம் | – | ரூ. 22,274.00 | இலட்சங்கள் |
| மொத்த செலவினம் | – | ரூ. 23,346.75 | இலட்சங்கள் |

| | | | |
|---|---|---|---|
| ஆகமொத்த வரவு | – | ரூ. 32,800.00 | இலட்சங்கள் |
| ஆகமொத்த செலவு | – | ரூ. 33,445.64 | இலட்சங்கள் |
| பற்றாக்குறை | – | ரூ. 645.64 | இலட்சங்கள் |

இந்த நிதி நிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பற்றாக்குறையை சேலம் மாநகராட்சியின் வருவாயை மேம்பாடு செய்தும், அரசிடமிருந்து நிதி ஆதாரங்களை கூடுதலாகப் பெற்றும் சரி செய்யும் சூழ்நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வருவாய் கணக்கு

### வரியினங்கள் (Taxes)

### சொத்துவரி

| | | |
|---|---|---|
| மொத்த வரிவிதிப்புகள் எண்ணிக்கை | – | 1,58,976 |
| பிப்ரவரி 2008 முடிய வசூல் | – | ரூ. 1,400.00 இலட்சங்கள் |
| 2007–2008க்கு எதிர்பார்க்கப்படும் வசூல் | – | ரூ. 1,800.00 இலட்சங்கள் |
| 2008–2009க்கு உத்தேசிக்கப்படும் வசூல் | – | ரூ. 2,000.00 இலட்சங்கள் |

சொத்துவரியைப் பொறுத்த வரையில் நடப்பு நிதியாண்டில் கோட்டங்களில் வருவாய்ப்பிரிவு அலுவலர்கள், பணியாளர்கள் அடங்கிய கூட்டுக்குழு தலஆய்வு மேற்கொண்டதன் பலனாக 2007–2008 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி 2008 வரை கடந்த ஆண்டை விட கூடுதலாக வரி வசூல் செய்யப்பட்டு இதன் காரணமாக ரூ. 250.00 இலட்சங்கள் வருவாய் பெறப்பட்டுள்ளது.

சொத்து வரி குறித்து மாநகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட நீண்ட காலமாக நிலுவையிலிருக்கும் சொத்து வரி வழக்குகளை சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொண்டு முடிவுக்கு கொண்டுவந்து வரி வசூலில் இன்னும் முன்னேற்றம் காண திட்டமிடப்பட்டுள்ளது. கணினி வரி வசூல் மூலம் கால விரயம் தவிர்க்கப்படுவதுடன், பொது மக்கள் தாங்களாக வரியை செலுத்தக் கூடிய மனப்பக்குவத்திற்கு வந்துள்ளனர் என்பது ஏழு கணினி வரி வசூல் சேவை மையங்கள் மற்றும் ஒரு நடமாடும் கணினி வரி வசூல் மையம் ஆகியவற்றில் வசூலிக்கும் வரி மற்றும் வரியில்லாத் தொகைகளிலிருந்து தெரியவருகிறது என்பதை இந்த நேரத்தில் உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

01.04.2008 முதல் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் பொது சீராய்வு மூலமாக சேலம் மாநகராட்சிக்கு சொத்து வரியில் கணிசமாக கூடுதல் வருவாய் கிடைக்கும் என தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

<u>தொழில்வரி</u>

| | | |
|---|---|---|
| பிப்ரவரி 2008 முடிய வசூல் | – | ரூ. 207.95 இலட்சங்கள் |
| 2007–2008க்கு எதிர்பார்க்கப்படும் வசூல் | – | ரூ. 225.00 இலட்சங்கள் |
| 2008–2009க்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வசூல் | – | ரூ.300.00 இலட்சங்கள் |

<u>கேளிக்கை வரி</u>

| | | |
|---|---|---|
| 2007–2008ஆம் ஆண்டிற்கு வரப்பெற்றது | – | ரூ 140.00 இலட்சங்கள் |
| 2008–2009ஆம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் வரவு | – | ரூ 200.00 இலட்சங்கள் |

கேளிக்கை வரி வருவாயில் ஏற்படும் வருவாய் குறைவை ஈடுகட்ட அரசு மான்யம் வழங்கப்படுவதால் இதனில் கூடுதல் வருவாய் பெற வாய்ப்பு உள்ளது.

<u>வரியில்லா இனங்கள் (Non-Taxes)</u>

<u>முத்திரைத்தாள் கட்டணம்</u>

| | | |
|---|---|---|
| 2007–2008ஆம் ஆண்டிற்கு வரவு | – | ரூ. 1,020.00 இலட்சங்கள் |
| 2008–2009ஆம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்படும் வரவு | – | ரூ. 1,100.00 இலட்சங்கள் |

<u>குடிநீர் கட்டணம்</u>

| | | |
|---|---|---|
| மொத்த குடிநீர் இணைப்புகள் எண்ணிக்கை | – | 75,462 |
| பிப்ரவரி 2008 முடிய வசூல் | – | ரூ. 1,100.00 இலட்சங்கள் |
| 2007–2008க்கு எதிர்பார்க்கப்படும் வரவு | – | ரூ. 1,300.00 இலட்சங்கள் |
| 2008–2009க்கு உத்தேசிக்கப்படும் வரவு | – | ரூ. 1,650.00 இலட்சங்கள் |

குடிநீர் கட்டணமாக பெறப்படும் வருவாய் ஆனது, இந்த தலைப்பின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாநகராட்சியால் செலுத்தப்பட வேண்டிய பராமரிப்புக் கட்டணத் தொகை ஆகியவையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது குறைவு ஆகும். குடிநீருக்காகவும், மின்சாரத்திற்காகவும் செலுத்தப்படவேண்டிய தொகை ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. இதன் காரணமாக ஏற்படும் பற்றாக்குறையை சரி செய்யப் பொது நிதியிலிருந்து பெருமளவு செலவிடப்படுகிறது.

## கல்வி நிதி

### கல்வி வரி

2007–2008 ஆம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் வரவு – ரூ. 255.32 இலட்சங்கள்
2008–2009 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்படும் வரவு – ரூ. 286.05 இலட்சங்கள்

2007–2008ஆம் நிதியாண்டில் மாநகராட்சி பள்ளிகளின் அபிவிருத்திக்காக ரூ. 280.45 இலட்சம் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. இது முந்தைய ஆண்டுகளை விட கூடுதலாகும். இதேபோல் 2008–2009ஆம் நிதியாண்டிலும் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2007–2008ஆம் கல்வியாண்டின் இறுதித் தேர்வில் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு அரசுத் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாநகராட்சிப் பள்ளிகளின் மாணவ, மாணவியரின் சாதனைகளைப் பாராட்டி மாநகராட்சியின் சார்பாக முதல் பரிசாக ரூ. 5000/–ம், இரண்டாம் பரிசாக ரூ. 3000/–ம், மூன்றாம் பரிசாக ரூ. 1000/–மும் பரிசளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் 2007–2008ஆம் வருடத்திற்கான வரவு–செலவுத் திட்டத்திற்கான அறிவிப்பு எண். 24–ல் 2007–2008 கல்வியாண்டிலிருந்து 10வது வகுப்பு மற்றும் 12வது வகுப்பு இறுதித் தேர்வில் மாநில அளவில் முதல் 25 இடம் பெறும் மாணவ மாணவியருக்குச் சான்றிதழ், பரிசு வழங்குதல் மற்றும் இவர்களில் மேல் கல்வி பயில வசதியற்றவர்களுக்கு நிதியுதவி வழங்கவும் அரசால் ஏற்படுத்தப்படும் கார்பஸ் நிதிக்கு (Corpus Fund) மாநகராட்சியின் பங்களிப்புத் தொகையை கல்வி நிதியிலிருந்து வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### சொத்துக்கள் மூலம் வரவு

### அ. குத்தகை இனங்கள் (ஆண்டு உரிமையாணை இனங்கள்)

2007–2008ஆம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் – ரூ. 314.40 இலட்சங்கள்
2008–2009ஆம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்படும் வருவாய் – ரூ. 330.12 இலட்சங்கள்

ஆ. மாநகராட்சிக் கடைகள்

2007–2008ஆம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் – ரூ. 416.28 இலட்சங்கள்

2008–2009ஆம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்படும் வருவாய் – ரூ. 409.88 இலட்சங்கள்

சேலம் மாநகராட்சிக்கு சம்மந்தப்பட்ட தொங்கும் பூங்கா வளாகத்தில் உள்ள கட்டிடங்களை மாநகர காவல் துறைக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளதற்கான 1997 முதல் 31.3.2008 முடிய காலத்திற்குரிய வாடகை தொகை ரூ. 2.10 கோடி 2007 – 2008 ஆம் நிதியாண்டில் பெறப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்த ஆண்டில் கூடுதலாக வருவாய் பெறப்பட்டுள்ளது.

மாநகராட்சியின் கடைகள், நிலங்கள் முதலான இனங்களைக் குத்தகைக்கு விடுவதன் மூலமும், தமிழக அரசின் அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 3.7.2007ன்படி மாநகராட்சி சொத்துக்களைக் குத்தகை நிபந்தனைகளின்படி மூன்றாண்டு காலம் முடிவடைந்த நிலையில் அக்குத்தகையைத் தன்னியல்பாகவே புதுப்பிக்கவும், இவ்வாறாக 9 ஆண்டுகள் வரை புதுப்பிக்கவும், மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகைத் தொகை 15 சதவீதம் உயர்த்தி வசூலிப்பதாலும், குத்தகையை புதுப்பித்தல் கட்டணம் வசூலித்தல், குத்தகை பெயர் மாறுதல் கட்டணம் மற்றும் 12 மாத குத்தகைத்தொகைக்குச் சமமான முன்பணத் தொகை வசூலித்தல் மூலமாகவும் இந்த இனத்தின் கீழ் இந்த ஆண்டு மேலும் கூடுதல் வருவாய் பெறப்படும் வாய்ப்புள்ளது.

<u>கட்டணங்கள் மூலம் வருவாய்</u>

2007–2008ஆம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் – ரூ. 500.00 இலட்சங்கள்

2008–2009ஆம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்படும் வருவாய் – ரூ. 550.00 இலட்சங்கள்

<u>அரசு நிதியுதவி மற்றும் மானியம்</u>

2007–2008 ஆம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் – ரூ. 3,289.32 இலட்சங்கள்

2008–2009ஆம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்படும் வருவாய் – ரூ. 3,500.00 இலட்சங்கள்

<u>இதர வருவாய்</u>

2007–2008ஆம் ஆண்டிற்கு எதிர்பார்க்கப்படும் வருவாய் – ரூ. 205.00 இலட்சங்கள்

2008–2009ஆம் ஆண்டிற்கு உத்தேசிக்கப்படும் வருவாய் – ரூ. 226.00 இலட்சங்கள்

# செலவினங்கள்

## வருவாய் கணக்கு

இந்தத் தலைப்பின் கீழ் பொது நிர்வாகச் செலவு, பொது நிர்வாகப் பணிகள், குடிநீர் விநியோகம், திடக்கழிவு மேலாண்மை, மருத்துவம், மலேரியா, கல்வி, வாகனங்கள், கட்டிடங்கள், சாலை, வடிகால், தெருவிளக்கு பராமரிப்புச் செலவினங்கள், கடன்கள் திருப்பிச் செலுத்துதல், மற்றும் இதர செலவினங்கள் ஆகியவை உள்ளடங்கியுள்ளன.

2007–2008ஆம் ஆண்டிற்கான திருத்திய மொத்த செலவு – ரூ. 9,400.00 இலட்சங்கள்
2008–2009ஆம் ஆண்டிற்கான உத்தேச மொத்த செலவு – ரூ10,098.89 இலட்சங்கள்

## மூலதனக் கணக்கு

இந்தத் தலைப்பின் கீழ் பொதுப் பணிகள் தவிர நமக்கு நாமே திட்டம், சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து செய்யப்படும் செலவினங்கள், சிறப்பு சாலைகள் அமைத்தல், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வளர்ச்சிப் பணி ஊக்க நிதியின் கீழான பணிகள், வெள்ள நிவாரணப் பணிகள், வாம்பே கழிப்பிடம், மழைநீர் சேமிப்புப் பணிகள், குடிநீர் வழங்கல் குறித்த திட்ட செலவினங்கள், திடக்கழிவு மேலாண்மை குறித்த செலவினங்கள், பாதாள சாக்கடைத் திட்டம், தனிக் குடிநீர் திட்டம், நவீன இறைச்சிக் கூடம், இடுகாடு மற்றும் சுடுகாடுகளில் தகனமேடை அமைப்பதற்கான செலவினங்கள், ஐ.எச்.எஸ்.டி.பி. (I.H.S.D.P.) திட்டப்பணிகள், யு.ஐ.டி.எஸ்.எஸ்.எம்.டி. (U.I.D.S.S.M.T) திட்டப்பணிகள், போக்குவரத்து அபிவிருத்திக்கான போக்குவரத்துத் திட்டப் பணிகள் (CTTS), பேருந்து நிலைய அபிவிருத்திப் பணிகள், பள்ளிகள் தொடர்பான பணிகள் மற்றும் தெருவிளக்கு அமைப்பது போன்ற செலவினங்கள் இந்தத் தலைப்பின் கீழ் கொண்டு வரப்படுகின்றன.

2007–2008ஆம் ஆண்டிற்கான திருத்திய மொத்த செலவு – ரூ. 3,241.40 இலட்சங்கள்
2008–2009ஆம் ஆண்டிற்கான உத்தேச மொத்த செலவு – ரூ. 23,346.75இலட்சங்கள்

## பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

### குடிநீர் வழங்கல்

சேலம் மாநகராட்சி நகராட்சியாக இருந்தபோது சேலம் நகரத்தின் மக்கள் தொகை 3,66,712 ஆகும். மாநகராட்சியாக உயர்த்தப்பட்ட பிறகு தற்போது மக்கள் தொகை 7,77,820 ஆக உயர்ந்துள்ளது. சேலம் நகராட்சியாக இருந்தபோது கீழ்காணும் இரண்டு குடிநீர் திட்டங்கள் செயல்பாட்டில் இருந்தன.

1. சேலம் நகராட்சியின் சொந்தக் குடிநீர் திட்டம்
2. மேட்டூர் – ஆத்தூர் கூட்டுக் குடிநீர் திட்டம்

மேற்கண்ட இரண்டு குடிநீர் திட்டங்கள் மூலமாக மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட காவிரி நீர் வழங்கப்பட்டு வருகிறது. மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கும் சீரான குடிநீர் வழங்கத் திட்டங்கள் தீட்டப்பட்டாலும், அவை சேலம் – ஆத்தூர் கூட்டுக் குடிநீர் திட்டத்திலேயே செய்து முடிக்க வேண்டியுள்ளது. அப்படியும் மாநகர் முழுமைக்கும் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு குடிநீர் சுமார் 100 லிட்டர் அளவு என்ற இலக்கை எட்டுவதில் உள்ள சிரமத்தை கருத்தில்கொண்டே **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்** அவர்களின் சீரிய முயற்சியால் சேலம் மாநகராட்சிக்கென தனிக் குடிநீர் திட்டம் வரவிருக்கிறது. இத்திட்டத்திற்காக கடந்த 14.9.2007 ஆம் தேதி நடந்த விழாவில் **மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்** அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. ரூ. 168.00 கோடி மதிப்பிலான இத்திட்டத்தின் பூர்வாங்கப் பணிகள் முடிந்து, விரைவில் திட்டம் செயல்படும் நிலையில் உள்ளது. ஒரு நாளில் 24 மணி நேரமும் குடிநீர் வினியோகம் செய்வது என்ற திட்டம் செயல்படும் விதம் குறித்து அறிந்து வர **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்** அவர்களின் தலைமையில் மேயர், துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்களாகிய நாமெல்லாம் மாநகராட்சி அலுவலர்களுடன் கடந்த 29.11.2007 மற்றும் 30.11.2007 ஆகிய தேதிகளில் கர்நாடக மாநிலத்தின் பெல்காம், உறுப்ளி, தார்வார் ஆகிய மாநகராட்சிகளுக்கு சென்று வந்தோம். அதனடிப்படையில் சேலம் மாநகராட்சியிலும் ஒரு நாளில் 24 மணி நேரமும் 7 நாட்களும் வினியோகம் செய்யும் திட்டம் பொது மக்கள் மற்றும்

தனியார் பங்களிப்போடு செயல்படுத்தப்பட்டு குடிநீர் தட்டுப்பாடே இல்லாத மாநகராக சேலம் திகழும் என்ற உறுதியை இந்த நல்ல தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக குடிநீர் வசதி செய்யப்படும்.

சாலை, வடிகால் பணிகள்

சேலம் மாநகராட்சிக்கு இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் மண்சாலையைத் தார்சாலையாக மாற்றுதல், மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் கான்கிரீட் சாலை அமைக்க ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ.4.12 கோடியில் சாலை மற்றும் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. மாநகராட்சியில் இணைக்கப்பட்ட பகுதிகள், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படாத பகுதிகள் ஆகியவற்றில் கூடுதல் கவனம் செலுத்தி அடிப்படை வசதிகளான சாலைகள் மற்றும் சாக்கடைப் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாதாள சாக்கடைத் திட்டம்

சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை குறைந்த செலவில் அதிக பயன்தரும் நவீன திட்டமாக செயல்படுத்த எண்ணியுள்ளோம். அதற்காக **மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்** அவர்களது தலைமையில் மேயர், துணை மேயர், ஆணையாளர் மற்றும் மாநகராட்சி செயற்பொறியாளர்கள் அடங்கிய குழு பூனா மற்றும் கோவாவில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஆய்வு செய்து வந்துள்ளது. அதன் அடிப்படையில் பொதுமக்களுக்கும், சுற்றுப்புறச்சூழலுக்கும் எவ்வித பாதிப்பும் இல்லாமல் 1. வெள்ளக்குட்டை, 2. வண்டிப்பேட்டை, 3. மண்குட்டை மற்றும் 4. அணைமேடு ஆகிய பகுதிகளில் நவீன சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க ஏதுவாக மதிப்பீடுகள் திருத்தி தயார் செய்யப்பட்டு தொழில் நுட்ப அங்கீகாரம் பெறப்பட்டு அதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் கடந்த 14.09.2007 அன்று **மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்** அவர்களால் நடத்தப்பட்டது.

மேற்படி நவீன சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிப்பு செய்யும் முறைகள், சுத்திகரிப்பு நீரின் தன்மை போன்றவற்றை மேயர், துணை மேயர் மற்றும் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் கோவா மாநிலத்திற்கு சென்று விபரம் அறிந்து வந்தோம். அனைவரின் கருத்திற்கேற்ப கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மேற்கண்ட நான்கு இடங்களில் அமைக்கும் வகையில் முதற்கட்ட பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. அறிக்கையாண்டில் பணிகள் துரிதமாக செயல்படுத்தப்பட உள்ளது.

## திருமணிமுத்தாறு அபிவிருத்தித் திட்டம் நிலை – II

சேலம் மாநகராட்சியின் மையப்பகுதியில் அமைந்துள்ள திருமணிமுத்தாற்றினை சீரமைத்திட முதற்கட்டப் பணிகள் ரூ. 5.40 கோடி மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டது. இப்பணியில் 1.5கி.மீ. தூரத்திற்கான சீரமைப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டது. தற்போது இரண்டாம் கட்டமாக திருமணிமுத்தாற்றில் மேலும் 2.80 கிமீ நீளத்திற்கு சீரமைத்திடவும், இத்துடன் சேர்த்து வெள்ளக்குட்டை ஓடையினை 2.86 கி.மீ நீளத்திற்கு சீரமைத்திடவும், திருமணிமுத்தாற்றின் மிக முக்கியமான மூன்று இடங்களில் பாலங்கள் அமைத்திடவும் ரூ31.50 கோடி மதிப்பீட்டிற்கு அரசு ஆணை எண். 85 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 6.9.2006ல் நிர்வாக அனுமதி பெற்று சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் உரிய தொழில் நுட்ப அனுமதியும் பெறப்பட்டுள்ளது. இதில் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள பாலம் மற்றும் நடைபாதை பாலம், குண்டு போடும் இடத்தில் உள்ள நடைபாதை பாலம் ஆகியவற்றை இடித்து அப்புறப்படுத்தி இத்திட்டத்தினைச் செயல்படுத்த திருவாளர்கள் பாலாஜி இண்டஸ்ரியல்ஸ் அண்டு அக்ரிகல்சுரல் கேஸ்டிங் நிறுவனத்திற்கு 9 பிரிவுகளுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு 10.10.2007 முதல் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை 2008–2009 ஆம் நிதியாண்டுக்குள் நிறைவேற்றி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி திருமணி முத்தாற்றின் கரையின் ஒரு பகுதியில் 2.80 கி.மீ. நீளத்திற்கு ஒரு சாலை அமைத்தால் அது நகரின் போக்குவரவு நெரிசலைத் தவிர்க்கும் என்பதினால் இத்திட்டம் செயல்படுத்தப்படும் நிலையிலேயே தொடர்ச்சியாக, சாத்தியக் கூறுகள் உள்ள இடங்களில் சாலைகளை அமைத்து போக்குவரவு நெரிசலை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் கரையின் அகலம் அதிகமாக உள்ள இடங்களில் சாலையோர பூங்கா அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும் **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்** அவர்களின் சீரிய முயற்சியில், **மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்** அவர்களின் வழிகாட்டுதலில், **தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர்** அவர்களின் உத்திரவின் பேரில் சேலம் மாநகராட்சியில் திருமணி முத்தாறு அபிவிருத்தி திட்டம், பாதாள சாக்கடைத் திட்டம், தனிக் குடிநீர் திட்டம், திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் போன்ற பெரிய திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேற்படி திட்டங்களைச் செம்மையாக செயல்படுத்த திட்ட மேலாண்மைக் குழு அமைக்க பல்வேறு பொறியாளர்களை நியமனம் செய்யக்கோரி மாமன்றம் தனது 22.1.2007ஆம் தேதிய தீர்மான எண். 419 ல் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது. அவற்றை விரைவில் செயல்முறைப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## மக்கள் குறை தீர்க்கும் நாள் நிவாரணப்பணி நிதி

2008–2009ஆம் நிதியாண்டில் ஒவ்வொரு திங்கள்கிழமை தோறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் நடைபெறும். அது சமயம் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீதான குறைகளைத் தீர்க்க மக்கள் குறை தீர்க்கும் நாள் நிவாரணப்பணி நிதியாக ரூ. 1.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

## பொது நிதியில் அடிப்படை வசதிப் பணிகள் ( சாலை, வடிகால், சிறுபாலம் மற்றும் கட்டிடம் )

2007–2008ஆம் ஆண்டில் சாலைகள், வடிகால்கள் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கவும், பராமரிக்கவும் 441 எண்ணிக்கையிலான பணிகள் ரூ. 2683.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, இதில் 116 எண்ணிக்கையிலான பணிகள் ரூ. 391.34 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. 2008–2009ஆம் அறிக்கை ஆண்டில் மேற்படி அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ. 900.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம்

சேலம் மாநகராட்சியில் தமிழ் நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2007–2008 ஆம் ஆண்டில் சாலைகள் புதுப்பித்தல், மற்றும் புதிய சாலைகள் அமைத்தல் ரூ. 1736.99 இலட்சம் மதிப்பீட்டில் 210 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க தேசிய நெடுஞ்சாலை எண். 7 அரபிக் கல்லூரியிலிருந்து சின்ன திருப்பதி வழியாக அயோத்தியாப்பட்டணம் அருகில் தேசிய நெடுஞ்சாலை எண். 68 ஐ இணைக்கும் சுற்றுச்சாலை அமைத்து சேலத்தின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாநில மற்றும் மத்திய அரசுகளைக் கேட்டுக் கொள்ளப்படும்.

<u>தெரு விளக்குகள்</u>

சேலம் மாநகராட்சிப் பகுதியில் தற்போது 60 கோட்டங்களிலும் குழல் விளக்குகள் 17,550 எண்ணிக்கையும், சோடியம் ஆவி விளக்குகள் 7,607 எண்ணிக்கையும், உயர் மின் கோபுர விளக்குகள் 5 எண்ணிக்கையும், பாதரச ஆவி விளக்குகள் 224ம் ஆக மொத்தம் 25,386 எண்ணிக்கைகள் உள்ளன. மேற்படி தெரு விளக்குகளை தனியார் நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணியை சிறப்பாகச் செய்து 99 சதவீத தெரு விளக்குகள் எரிய வைக்கப்பட்டு வருகிறது. மேலும் வருகிற ஆண்டுகளிலும் தெரு விளக்குகள் பராமரிப்பு செய்யும் பணியினை தனியார் வசம் ஒப்படைப்பு செய்து நல்ல முறையில் பராமரிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் எல்லைப் பகுதியில் உள்ள புறவழிச் சாலைகளில் புதிய டி5 (T5) விளக்குகள் 362 எண்ணிக்கை ரூ. 74.06 இலட்சம் மதிப்பீட்டிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், அஸ்தம்பட்டி ரவுண்டானா மற்றும் சூரமங்கலம் காவல் நிலைய எதிர்புறம் ஆகிய மூன்று இடங்களில் உயர்மின் கோபுர விளக்குகள் ரூ.17.10 இலட்சம் மதிப்பீட்டிலும் அமைக்கப்பட்டுள்ளன.

2008–2009ஆம் நிதியாண்டில் மாநகராட்சியின் பல்வேறு இடங்களில் 1500 எண்ணிக்கையில் குழல் விளக்குகள் மற்றும் 300 டி5 (T5) விளக்குகள் ரூ.36.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மரபு சாரா எரிசக்தியைப் பயன்படுத்தி மின்சாரச் செலவை மீதப்படுத்தும் நோக்குடன் சூரிய ஒளி தெரு விளக்குகள் 38 எண்ணிக்கை ரூ. 9.90 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது.

<u>புதிய பேருந்து நிலையம்</u>

பல ஆண்டுகளுக்குப் பின்னர் புதிய பேருந்து நிலையத்தை ரூ. 1.15 கோடி செலவில் புதுப்பித்து, சாலைகள், சாக்கடை வசதிகள், மழை நீர் தேங்காமல் செல்ல ஓடைகள் விஸ்தரிப்பு, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கல், புதிய நவீன கழிப்பிடம் அமைத்தல், ஆட்டோக்கள், டாக்சி மற்றும் தனியார் கார் நிறுத்தம் தளம் அமைத்தல், நடை பாதை கடைகளை ஒழுங்குபடுத்தி தனியாக தளம் அமைத்து, இடஒதுக்கீடு செய்தல், ஊனமுற்றோருக்கு சாய்தளம் அமைத்தல் மின் விளக்குகள் போன்ற பணிகளை செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது.

<u>மின்சாரம் உற்பத்தி செய்தல்</u>

சேலம் மாநகராட்சி பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பிடங்களில் வெளியேறும் மனிதக் கழிவுகளில் இருந்து நவீன தொழில் நுட்பத்துடன் 15 கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்து கழிப்பிடத்திற்கும், பேருந்து நிலையங்களில் செயல்படும் கடைகளுக்கும் தேவையான மின்சாரத் தேவையை பூர்த்தி செய்து கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக மூன்று இடங்களில் மின் உற்பத்தி அமைப்புகள் ரூ. 40.50 இலட்சம் செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>கணினி மயமாக்குதல்</u>

மாநகராட்சி நிர்வாகத்தின் அலுவலக நடைமுறைகளை விரைவாக்க கணினிமயமாக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மாநகராட்சியின் மைய அலுவலகத்திலும், நான்கு மண்டல அலுவலகங்களிலும் கணினிகள் நிறுவப்பட்டுள்ளன. நான்கு மண்டல அலுவலகங்கள் மற்றும் இதர மூன்று வரி வசூல் மையங்கள் மூலம் வரி மற்றும் வரி இல்லாத இனங்களுக்கான தொகையினை பொது மக்கள் நேரடியாக செலுத்திட வசதி செய்யப்பட்டுள்ளது.

இப்பணியை மேலும் விரிவு செய்து மாநகரத்தின் எந்த ஒரு பகுதியைச் சேர்ந்தவரும் எந்தவொரு வரி வசூல் சேவை மையத்திலும் தொகையைச் செலுத்தும் வகையில் மைய அலுவலகம், மண்டல அலுவலகங்கள் மற்றும் வரி செலுத்தும் சேவை மையங்களைத் தொடர்பு ஏற்படுத்தி இணைக்கப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சியிலேயே அனைத்துத் திட்டங்கள் மற்றும் அதற்கான ஆவணங்களைத் தயாரிக்கும் பணியும் துவங்கப்பட உள்ளது. இப்பணிக்கான உரிய கணினி மற்றும் அது சம்பந்தமான சர்வர்ஸ், ஸ்கேனர்ஸ், பிளாட்டர், பிரிண்டர் போன்ற அத்தியாவசியக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. மாநகராட்சி மைய அலுவலகத்திலும், நான்கு மண்டல அலுவலகங்களிலும் மாநகர மக்கள் உரிய விவரங்கள், கட்டணங்கள் முதலான மாநகராட்சி சம்பந்தப்பட்ட அனைத்துத் தகவல்களையும் தாங்களே தெரிந்து கொள்ளும் வகையில் சேலம் மாநகராட்சிக்கான இணையதளத்தில் (http://www.salemcorporation.com/citizen services, <u>www.salem</u>corporation.gov.in ) வரி விதிப்புதாரர் பெயர், செலுத்த வேண்டிய தொகை மற்றும் நிலுவை போன்ற விவரங்களை அறிந்து கொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளது.

2008 – 2009 ஆம் நிதியாண்டில் மாநகராட்சி அலுவலக நடைமுறையில் கணினிமயமாக்குதலை விரிவுபடுத்துகின்ற வகையில் மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் அன்றாட அலுவல்களைக் காகிதம் மூலம் கோப்புகள் மேற்கொள்ளுவதைத் தவிர்த்து கணினி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்து. அதற்காக மைய அலுவலகத்தின் அனைத்துப் பிரிவுகள் மற்றும் மண்டல அலுவலகங்கள் அனைத்தும் கணினிமயமாக்கல் மூலம் இணைக்கப்பட்டு **இன்ட்ராநெட் மூலம்** (Intranet) அனைத்து அலுவலர்களும் கணினி மூலமே கோப்புகளை கையாண்டு கோப்புகளற்ற நிர்வாகம் என்ற புதுமை நிலையினை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மாநகராட்சிக்குச் செலுத்த வேண்டிய வரிகளை அந்தந்தப் பகுதிகளில் சென்று வசூல் செய்வதற்கு வசதியாக மாநகராட்சி வாகனத்தில் நவீன முறையில் கட்டமைப்பு ஏற்படுத்தி கணினி மூலம் வசூல் செய்ய நடமாடும் வரி வசூல் சேவை மையம் ஏற்படுத்தப்பட்டு நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை மேலும் மேம்படுத்திக் கூடுதலாக ஒரு நடமாடும் கணினி வரி வசூல் செய்யும் வாகனம் ரூ. 8.00 இலட்சம் செலவில் இயக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது தவிர வங்கிகளிலும் வரிகளை நேரடியாக மக்கள் செலுத்தும் வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2008–2009ஆம் நிதியாண்டிலிருந்து 4 வார்டு அலுவலகங்கள் மற்றும் மைய அலுவலகத்திலுள்ள கருவூலங்களில் கணினி மூலம் வசூல் செய்யவும், கணக்குப் பிரிவு மற்றும் அத்தியாவசியப் பிரிவுகளில் கணினிகளை நிறுவி Financial Accouting System எனப்படும் அனைத்து வரவு, செலவு விவரங்களையும் கணினி மூலம் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிக்காக மாநகராட்சிக்கு உதவி புரிய தனியாக பட்டய கணக்காளர்கள் (Chartered Accountants) நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## கட்டிட அனுமதி வழங்குதல்

கணினி மூலம் விண்ணப்பம் பெறப்பட்ட 24 மணி நேரத்திற்குள் கட்டிட அனுமதி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோல் 5 நிமிடத்தில் பிறப்பு /இறப்பு சான்றிதழ் இலவசமாக வழங்கப்படும். மேலும் அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான இனங்களில் உரிமம் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. குடிநீர் இணைப்பு கோரி கணினி மூலம் நேரடியாக விண்ணப்பிக்கவும், குறைகள் மற்றும் நிறைகளை நேரடியாக கணினியில் தெரிவிக்கவும், பயோ மெட்ரிக் மூலம் பணியாளர்கள் வருகையை பதிவு செய்தல், கிரெடிட் கார்டு மற்றும் டெபிட் கார்டு மூலம் வரிகளை செலுத்தவும், வரி செலுத்துவோரே சுயமதிப்பீடு முறையின் மூலமாக வரியினை தெரிந்து கொள்ளவும் கணினியில் வசதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்தப்புள்ளிகளை இணைய தளத்தின் மூலம் (இ—டெண்டரிங்) பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்

மேற்படி திட்டத்தில் சேலம் மாநகராட்சியில் அன்றாடம் சேகரம் ஆகும் திடக்கழிவுகளை எருமாபாளையம், வீராணம் பகுதியில் உள்ள உரக்கிடங்குகளில் கொட்டப்படுகிறது. **மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்** அவர்களின் சீரிய முயற்சியில் புல எண் 6/1 செட்டிச்சாவடி கிராமம் என்ற இடத்தில் 100 ஏக்கர் நிலம் சேலம் மாநகராட்சியின் திடக்கழிவுகளை கையாள ஒப்படைக்கப்பட்டுள்ளது. திடக்கழிவுகளை எவ்வாறு கையாளுவது என்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க திருவாளர்கள் மகேந்திரா & மகேந்திரா கன்சல்டண்டு என்ஜினியர்ஸ் லிமிடெட், சென்னை, அவர்கள் திட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இது சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்த அறிக்கை ஆண்டில் சுமார் ரூ.37.35 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் மேற்படி இடத்தில் கட்டி, இயக்கி, மாற்றுதல் அடிப்படையில் மாநகராட்சியில் சேகரமாகும் குப்பைகளை தரம்பிரித்து அதனைத் தரத்திற்கு ஏற்ப உரம் தயார் செய்தல், மணல் தயார் செய்தல், எரிபொருள் தயார் செய்தல், பிளாஸ்டிக் மூலப்பொருள் தயார் செய்தல் போன்ற முறையில் அப்புறப்படுத்த

நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கா வண்ணமும், நிலத்தடிநீர் பாதிக்காவண்ணமும் அதே சமயம் மாநகராட்சிக்கு வருமானம் வரும் வகையிலும் திட்டம் செயலாக்கப்படும்.

செட்டிச்சாவடி நவீன திடக்கழிவு மேலாண்மை வளாகத்திற்கு செல்லும் சாலை மாநகராட்சி மற்றும் செட்டிச்சாவடி ஊராட்சிக்கு சொந்தமானது ஆகும். மேற்படி சாலை போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லை. இதனால் திடக்கழிவுகளை எடுத்துச் செல்லும் வாகனங்களுக்கு அடிக்கடி பழுது ஏற்படுவதுடன் வாகனங்களை இயக்க முடியாத நிலையிலும் உள்ளது. மேலும் மேற்படி சாலையினை மாநகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக்கொண்டு பராமரிப்பு செய்திட செட்டிச்சாவடி ஊராட்சி தீர்மானம் வழங்கியுள்ளது.

அதன் அடிப்படையில் மாநகராட்சி வாகனங்கள் செல்வதற்கு வசதியாகவும், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்தும் முதற்கட்டமாக செட்டிச்சாவடி சாலைகளில் போக்குவரத்திற்கு உகந்ததாக சாலைகள் அகலப்படுத்தி அபிவிருத்திப் பணிகள் ரூ. 3.10 கோடி செலவில் செய்யப்பட உள்ளது.

இதைத் தவிர மாநகரில் உள்ள கழிவுநீர் நச்சுத் தொட்டிகளில் இருந்து வரும் கழிவுகளை அகற்ற ரூ. 30.00 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுகள் அகற்றும் நவீன வாகனம் (Sullage Tanks) இரண்டு எண்ணிக்கையில் வாங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அறிக்கையாண்டில் வாங்கி பயனுக்குக் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## நவீன இறைச்சிக் கொட்டில்

சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய இறைச்சிக் கொட்டில் இல்லை என்பதால் கோட்டம் எண். 50 மணியனூரில் பகுதி II திட்டத்தின் கீழ் நவீன வசதிகளுடன் ரூ. 68.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன இறைச்சிக் கொட்டில் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணி நடப்பு நிதியாண்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்குக் கொண்டுவரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மகப்பேறு மருத்துவமனை மற்றும் குழந்தைகள் நல்வாழ்வு மையம்

சேலம் மாநகராட்சி கோட்டம் எண். 52ல் ஜாரி கொண்டலாம்பட்டி கள்ளிக் கோட்டை மெயின் ரோடு சுப்பிரமணியசாமி கோயில் பின்புறம் அரசு மான்யம் ரூ. 20.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய தாய்சேய் நல விடுதி கட்டும் பணிக்கான பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் கோட்டம் எண். 57ல் கருங்கல்பட்டி மார்க்கெட் பகுதியில் ரூ. 24.50 இலட்சம் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய தாய் சேய் நல விடுதி கட்டும் பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேற்படி பணி 2008–2009ஆம் நிதியாண்டில் முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும்.

மருத்துவ மனைகள்

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட கோட்டம் எண். 40ல் அண்ணா மருத்துவமனை வளாகத்தில் உள்ள மிகவும் பழமை வாய்ந்த மருத்துவமனைக் கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி, அதே இடத்தில் மாநகராட்சியின் பொது நிதியின் மூலம் ரூ. 30.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய மருத்துவமனை கட்டும் பணிக்கான பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. கிச்சிப்பாளையம் பகுதியில் உள்ள மாநகராட்சி தாய் சேய் நல விடுதிக்கு ரூ. 24.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டுவதற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் 2008–2009ஆம் நிதியாண்டில் நிறைவடைந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். குமாரசாமிபட்டி பகுதியில் உள்ள தாய்சேய் நல விடுதியினை ரூ.30.00 இலட்சம் செலவில் மேம்படுத்துதல், சூரமங்கலம் பகுதியில் உள்ள தாய் சேய் நல விடுதிக்கு ரூ.30.00 இலட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டுதல் ஆகிய பணிகள் அறிக்கையாண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

எரிவாயு தகன மேடை

சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான கோட்டம் 12 ல் உள்ள காக்காயன் சுடுகாட்டில் பகுதி II திட்டத்தின் கீழ் ( Part II Scheme 2006 – 2007 ) அரசு மான்யம் ரூ. 20.00 இலட்சம் மற்றும் மாநகராட்சியின் பொது நிதியின் பங்களிப்பு ரூ. 78.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 98.00 இலட்சம் மதிப்பீட்டில் "எரிவாயு தகன மேடை" அமைத்திட மாமன்றம் தனது

22.12.06 ஆம் தேதிய 293 எண் கொண்ட தீர்மானத்தில் அனுமதியளித்து, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதியுடன் தற்சமயம் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 2008 – 2009 ஆம் நிதியாண்டில் முடிக்கப்படும்.

இதனைத் தவிர கிச்சிப்பாளையம், சீலநாய்க்கன்பட்டி, செவ்வாய்ப்பேட்டை மற்றும் அம்மாப்பேட்டை போன்ற பகுதிகளில் உள்ள இடுகாடுகளை மேம்படுத்த ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

<u>மாவட்ட ஆட்சியர் வளர்ச்சி நிதி</u>

இரண்டாவது மாநில நிதிக்குழு மான்யம் சமன்பாடு மற்றும் ஊக்க நிதியின் ஒரு பகுதியாக மாவட்ட ஆட்சியர் வளர்ச்சி நிதியில் 2007 – 2008 ஆம் ஆண்டுக்கு ரூ. 44.00 இலட்சம் ஒதுக்கீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

<u>பள்ளிக்கட்டிடம் மற்றும் கல்வி நிதி</u>

2007–2008ல் சேலம் மாநகராட்சியின் ஆளுகைக்கு உட்பட்டதும், மாநகராட்சியின் சொந்தக் கட்டிடங்களில் செயல்பட்டு வருவதுமான துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பராமரிப்பு மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகள் ரூ. 280.45 இலட்சம் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் 2008 –2009 ஆம் நிதியாண்டில் ரூ. 170.00 இலட்சம் மதிப்பீட்டில் 8 பள்ளிகளில் பழுது, மராமத்துப் பணி மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சி கோட்டை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பழமைவாய்ந்த கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தி புதிய வகுப்பறைகள், ஆய்வகங்கள், நவீன கழிப்பறைகள், மாணவர்கள் அமர்ந்து சாப்பிட வசதியான கூடம், சைக்கிள்கள் நிறுத்தும் இடம் போன்ற வசதிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9, 10 மற்றும் 11வது கோட்ட பகுதிகளில் வசிக்கும் மாணவ, மாணவியர்களின் நலனைக் கருதி வாய்க்கால்பட்டறை பகுதியில் உள்ள பள்ளியினை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தவும் அதற்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

35வது கோட்டம் நெ.2 புதுத்தெரு பகுதியில் புதியதாக ஒரு மாநகராட்சி துவக்கப்பள்ளியினை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குகை மாநகராட்சிப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தினந்தோறும் மாணவிகள் கூடி காலை வணக்கம் செலுத்தும் இடம் மண் தரையாக உள்ளது. அதனை பேவர் பிளாக் கொண்ட தளமாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சி பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு யோகா பயிற்சி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் தூய்மையாக பராமரிப்பு செய்து வைத்திருக்கும் மாநகராட்சி பள்ளிகளை தேர்ந்தெடுத்து அதன் தலைமை ஆசிரியருக்கு பாராட்டும், விருதும் வழங்கப்படும்.

## ஒருங்கிணைந்த குடியிருப்பு குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்
## (IHSDP) ( Integrated Housing Slum Development Programme )

சேலம் மாநகராட்சியின் 4 வார்டு அலுவலகங்களுக்கு உட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட 113 குடிசை மற்றும் குடிசை சார்ந்த பகுதிகளில் குடிசைகளே இல்லாத குடியிருப்பை உருவாக்கவும் மற்றும் அடிப்படை வசதிகளை ரூ. 19.93 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திடவும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசிடமிருந்து நிர்வாக அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 2008 – 2009 ஆம் நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

## புதிய சுகாதார வளாகம் கட்டுதல் மற்றும் பராமரிப்பு செய்தல்

2007–2008ஆம் நிதியாண்டில் சேலம் மாநகராட்சியின் ஜல்லிக்காடு பகுதியில் உள்ள பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கழிப்பிடம் கட்டும் கோரிக்கையினை **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்** அவர்களால் பரிசீலிக்கப்பட்டு அதற்குத் தேவையான இடத்தினை அரசினர் தொழிற் பயிற்சி நிறுவனத்திடமிருந்து மாநகராட்சிக்கு வழங்கப்பட்டு மேற்படி இடத்தில் சுமார் 5500 ச.அடி நிலத்தில் ரூ. 17.60 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நவீன சுகாதார வளாகம் அமைக்கப்பட்டு **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்** அவர்களால் 8–3–2008 அன்று திறக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது.

மாநகரில் உள்ள 216 பொதுக் கழிப்பிடங்களில் மிகவும் பழுதடைந்த கழிப்பிடங்கள் 50 எண்ணிக்கைகளை முதல் கட்டமாக ரூ. 1.00 கோடி செலவில் சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சி பகுதிகளில் வாம்பே திட்டத்தின் கீழ் 12 கழிப்பிடங்கள் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்க உத்தேசிக்கப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள அரசு ரூ. 20.00 இலட்சம் மான்யமாக வழங்கியுள்ளது. மீதம் ஆகும் செலவுத் தொகையினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து ஈடு செய்து 2008–2009 ஆம் நிதி ஆண்டில் பணிகள் முடிக்கப்படும்.

## புதிய அலுவலகம் கட்டுதல்

சேலம் மாநகராட்சி மைய அலுவலகம் ஏற்கனவே உள்ள பழைய கட்டிடங்களில் இயங்கி வருகிறது. தற்சமயம் உள்ள பொறியியல் பிரிவு, கணக்குப் பிரிவு, நலப்பிரிவு மற்றும் இதர பிரிவுகள் பழமையான கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. இந்தக் கட்டிடங்கள் பழுதடைந்த நிலையில் இருப்பதாலும், இட வசதி போதுமானதாக இல்லாத காரணத்தினாலும், நவீன வசதிகளுடன் கூடிய மாமன்றக் கூடம் மற்றும் அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டிடம் அடங்கிய மைய அலுவலகக் கட்டிடம் மாநகராட்சிக்குச் சொந்தமான தொங்கும் பூங்காவில் அமைக்க ரூ. 5.00 கோடி மதிப்பீட்டில் திட்டமிட்டு அதற்கான பூர்வாங்க பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த பணி 2008–2009 ஆம் நிதி ஆண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## பூங்காக்கள் மற்றும் ஏரி மேம்பாடு

சேலம் மாநகராட்சியின் 4 மண்டல பகுதிகளிலும் தலா இரண்டு வீதம் மொத்தம் எட்டு பூங்காக்களை அனைத்து உள் கட்டமைப்பு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுடன் சிறப்பாக மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர சுற்றுலா பயணிகளைக் கவரும் வண்ணம் பள்ளப்பட்டி ஏரியில் படகு சவாரியுடன் பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த பூங்கா ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் முதற் கட்டமாக அறிக்கை ஆண்டில் ரூ. 95.00 இலட்சம் செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

அம்மாப்பேட்டை கீழ்டேங்க் வளாகத்தின் ஒரு பகுதியில் ரூ. 10.00 இலட்சம் செலவில் பூங்கா அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## புதிய வாகனங்கள் வாங்குதல்

சேலம் மாநகராட்சியில் உள்ள உதவி ஆணையர்கள் பயன்பாட்டிற்கு வாகனம் இல்லாததால் புதியதாக 5 வாகனங்கள் ரூ. 24.00 இலட்சம் செலவில் வாங்கி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

## நேரு கலையரங்கம் பராமரிப்பு

1961 ஆம் வருடம் திறந்த வெளி கலையரங்கமாக ஆரம்பிக்கப்பட்டு இன்று சுமார் 2500 பேர் அமரக்கூடிய வகையில் உள்ள நேரு கலையரங்கத்தினை ரூ. 100.00 இலட்சம் செலவில் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## போக்குவரவு மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் செரிரோடு, மரவனேரி பண்டு ரோடு ஆகியவற்றின் சந்திப்பினை ரூ. 74.50 இலட்சம் செலவில் அகலப்படுத்தி விரிவுபடுத்தவும், அதை அகலப்படுத்தும்போது தேவையான இடத்தினை விஜயராகவாச்சாரியார் மன்றம் மற்றும் மாவட்ட நூலகம் ஆகியோரிடமிருந்து பெற்று விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்த நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் ரூ. 56.00 இலட்சம் வரை மான்யமாக வழங்கப்பட உள்ளது. மீதம் உள்ள தொகையை மாநகராட்சி பொது நிதியில் இருந்து ஈடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும் சேலம் – விருத்தாசலம் தொடர் வண்டி இருப்புப் பாதை அகலப்பாதையாக மாற்றம் செய்யப்பட்டு தற்சமயம் தொடர்வண்டி இயக்கப்படுகிறது. மேற்படி தொடர் வண்டி செல்லும்போது ஒவ்வொரு முறையும் முள்ளுவாடி கேட் பகுதியில் கேட் மூடப்பட்டு போக்குவரத்து ஸ்தம்பித்து விடுகிறது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு முள்ளுவாடி கேட் பகுதியில் நெடுஞ்சாலை மற்றும் இரயில்வே துறையின் ஒத்துழைப்போடு மேம்பாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## நமக்கு நாமே திட்டம்

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய திட்டமான நமக்கு நாமே திட்டம் நமது மாநகராட்சியில் மேற்கொள்ளும் பொருட்டு பொது மக்கள் பங்குத் தொகையாக ரூ. 5.25 இலட்சம் வழங்கியது போக அரசு மான்யமாக ரூ. 10.10 இலட்சம் மாவட்ட ஆட்சியர் செயல்முறைகள் கடிதம் எண். 2407/2007/சி2 நாள்: 29.02.2008 ன் படி வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ. 15.35 இலட்சத்தில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு 50 எண்ணிக்கை தள்ளுவண்டிகள், செவ்வாய்ப்பேட்டை லாரி நிலையத்தில் உயர் மின் கோபுர விளக்கு, பள்ளக்காடு ஸ்ரீ நகர் பகுதியில் நூலக கட்டிடம் மற்றும் பூங்கா ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

## திட்டப் பிரிவு

சேலம் மாநகராட்சியில் அனுமதி பெறாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் அரசாணை (நிலை) எண். 59 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி.1) துறை நாள் 25-7-06ன்படி 2006 ஆம் ஆண்டில் 909 மனைகள் முறைப்படுத்தப்பட்டு வருவாய் ரூ. 1,21,50,686/- பெறப்பட்டது. மேலும் அரசாணை (நிலை) எண். 56 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி.1) துறை நாள் 30-4-2007ன்படி 2007 ம் ஆண்டில் 2043 மனைகள் முறைப்படுத்தப்பட்டு ரூ.1,63,76,841/- பெறப்பட்டது, ஆக மொத்தம் இத்திட்டத்தின் கீழ் இதுவரை மொத்தம் 2952 மனைகள் முறைப்படுத்தப்பட்டு இதன் மூலம் மொத்த வருவாய் ரூ. 2,85,27,527/-ம் பெறப்பட்டது.

## பொது சுகாதாரப் பிரிவு

சேலம் மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளிலும் பொது சுகாதார வசதிகளை மேம்படுத்த 2008–2009ஆம் நிதியாண்டில் கீழ்கண்டவாறு பல்வேறு பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### மருத்துவ சேவைகள்

சேலம் மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 7 நகர் நல மையங்கள், 9 மருந்தகங்கள், மற்றும் 5 தாய் சேய் நல விடுதிகள் மூலம் 2007ஆம் ஆண்டில் 2,10,000 நபர்களுக்கு அலோபதி சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்திய முறை மருத்துவத்தில் சித்தா, யுனானி மற்றும் ஆயுர்வேதம் மருந்தகங்கள் மூலம் 45,000 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

2007–2008ஆம் ஆண்டிற்கு மருந்துகள் வாங்குவதற்கென ரூ.16.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலமாக அலோபதி மருந்துகளும், இந்திய மருத்துவ முறைக்கான மருந்துகள் டேம்ப்கால், இம்காப்ஸ் ஆகிய நிறுவனங்களிடமிருந்து வாங்கப்பட்டுள்ளது. 2008–2009ஆம் ஆண்டிற்கு புறநோயாளிகள் சிகிச்சைகளுக்கு மருந்துகள் வாங்குவதற்கென நிதி ஒதுக்கீடு ரூ.25.00 இலட்சம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி மருத்துவமனைகளை சிறந்த முறையில் பராமரித்து தூய்மையாக வைத்துக் கொள்வதுடன் சிறந்த சேவை செய்யும் மாநகராட்சி மருத்துவ அலுவலர்களுக்கு ஆண்டுதோறும் 3 மருத்துவமனைகளின் மருத்துவ அலுவலர்களை தேர்ந்தெடுத்து தலா ரூ. 2500/– வீதம் பண முடிப்பும் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

### வரும் முன் காப்போம் திட்டம்

தமிழகத்தில் உள்ள ஏழை, எளிய கிராமப்புற, நகர்ப்புற மக்களுக்குத் தரமான மருத்துவ சிகிச்சை அளிக்கும் சிறப்புத் திட்டமான **மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர்** அவர்களின் **வரும் முன் காப்போம் திட்டம்** புதுப்பொலிவுடன் சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. 2007–ஆம் ஆண்டில் 7 முகாம்கள் நடத்தப்பட்டன. இதில் 8902 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். 2008–2009 ஆம் ஆண்டில் 15 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொது சுகாதார வரலாற்றின் புகழ் வாய்ந்த திட்டமான டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் ஏழை கர்ப்பிணித் தாய்மார்களின் பொருளாதார சுமையைக் குறைக்கவும், தேவையான ஓய்வெடுக்கவும், ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுத்து அதனை நல்ல முறையில் பராமரிக்கவும் உதவிடும் நோக்கில் முதல் இரண்டு கர்ப்பத்திற்கு நிதி உதவியாக ரூ. 6,000 வழங்கப்படுகிறது. இது பிரசவத்திற்கு முன் 3 மாதங்களுக்கும், பிரசவத்திற்குப்பின் 3 மாதங்களுக்கும் ரூ. 3,000 வீதம் மொத்தம் ரூ. 6,000 இரண்டு தவணைகளாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சேலம் மாநகராட்சிப் பகுதியில் நடப்பு ஆண்டு 5,900 ஏழை கர்ப்பிணிகளுக்கு ரூ.3.54 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு மகப்பேறு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. வரும் நிதி ஆண்டில் சுமார் 6,000 ஏழை கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூ. 3.60 கோடி நிதி ஒதுக்கீடு பெற்று வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவிர தேசிய மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் மத்திய அரசிடம் இருந்து ரூ. 36.00 இலட்சம் நிதி உதவி பெற்று வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## தாய் சேய் நலம் மற்றும் மருத்துவமனைகளை அனைத்து வசதிகளுடன் மேம்படுத்துதல்

சேலம் மாநகரில் உள்ள ஏழை, எளிய மக்கள் ஆண்டுக்கு சுமார் 2,50,000 என்ற அளவில் மாநகராட்சி மருத்துவமனைகளில் மருத்துவ பயனை பெற்று வருகின்றனர். தற்போது மாநகராட்சியில் செயல்பட்டு வரும் நகர் நல மையங்கள், தாய் சேய் நல விடுதிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றை மேம்படுத்தி, அங்கு நவீன கருவிகள் வாங்கி பயன்படுத்தியும், படுக்கை வசதிகள், அறுவை சிகிச்சை அரங்கு, பிரவசத்திற்கான சிறப்பு வசதிகள், பச்சிளம் குழந்தைகளுக்கான சிகிச்சைப் பிரிவு உள்ளிட்ட பல வசதிகளை ஏற்படுத்தியும், கூடுதலாக மருத்துவர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்களை நியமனம் செய்து "24 மணி நேரமும் அவசர சிகிச்சைப் பிரிவு" செயல்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் மூலம் மாநகரில் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்குத் தரமான மருத்துவ வசதிகள் கிடைத்திடவும், தாய் மற்றும் சேய் இறப்பு விகிதத்தை குறைக்க சிறப்பான முறையில் சேவை மேற்கொள்ளவும் வாய்ப்புள்ளது. இதற்காக நடப்பு நிதி ஆண்டில் தேசிய ஊரக நலத்திட்டம் மூலம் (National Rural Health Mission) ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெற்று திட்டத்தை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>துப்புரவு பணியாளர் நலன்</u>

மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்துத் துப்புரவுப் பணியாளர்களின் சுகாதார மேம்பாட்டிற்காகவும், வேலைப்பளுவை எளிதாக்கவும், நன்மதிப்பைக் கொடுப்பதற்கும், பாதுகாப்பிற்காகவும் கடந்த ஆண்டு பணியாளர் அடையாள அட்டை, சீருடைகள் வழங்கப்பட்டன. மேலும் பாதாள சாக்கடை, நச்சுத்தொட்டி ஆகியவற்றை சுத்தம் செய்யும்போது உயிர்காக்க பயன்படுத்தப்படும் சிறப்பு பாதுகாப்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. 2008–2009ஆம் நிதியாண்டில் அனைத்து துப்புரவு பணியாளர்களுக்கும் தொப்பிகள், ஒளி பிரதிபலிக்கும் மேற்சட்டை, சுவாசக் கவசம், கையுறைகள், காலணிகள், மழைக்கோட்டுகள் ஆகியவை வாங்கவும், சாக்கடை சுத்தம் செய்யும் பணியாளர்களுக்கு கம்பூட்ஸ்களும், லாரி பணியாளர்களுக்கு தலைக்கவசம் போன்ற உபகரணங்கள் வாங்குவதற்கும் ரூ. 20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

துப்புரவு பணியாளர்களை கௌரவிக்கும் பொருட்டு இனிவரும் ஆண்டுகளில் மே மாதம் 2ம் தேதியை "துப்புரவு பணியாளர்கள்" தினமாக கொண்டாட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அது சமயம் சிறந்த துப்புரவு பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ரூ. 1000/– வரை பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

<u>உணவு கலப்பட தடுப்புச் சட்டம்</u>

உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின் கீழ் இம்மாநகராட்சியில் உள்ள அனைத்து பகுதிகளிலும் பொது மக்கள் பயன்படுத்தக் கூடிய உணவுப் பொருட்களில் ஏதேனும் கலப்படம் உள்ளதா எனக் கண்டறிய இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் 10 உணவு ஆய்வாளர்கள் மூலம் 348 மாதிரிகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு அதனை பரிசோதனைக்கு உட்படுத்தி, அதில் கலப்படம் என தெரியவந்த 64 நபர்கள் மீது பொது சுகாதாரம் மற்றும் உணவு கலப்பட தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## மலேரியா நோய் ஒழிப்பு மற்றும் கொசு ஒழிப்புத் திட்டம்

சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் தேசிய நகர்ப்புற மலேரியா நோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கொசு ஒழிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்கள் ஒத்துழைப்புடன் சுற்றுப்புறத்தூய்மை, சுகாதாரம், கொசுக்களால் பரவும் நோய்கள் மற்றும் அவற்றை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. 2007–2008 ஆம் ஆண்டில் ரூ. 49.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கொசு புழு ஒழிப்பு மருந்துகளும், கொசு ஒழிப்பு புகை தெளிக்கும் மருந்துகளும், அதற்குத் தேவையான எரிபொருள் பயன்பாட்டிற்கும் செலவிடப்பட்டது. 2008–2009 ஆம் நிதியாண்டில், புதியதாக 1 சூப்பர் பாக் இயந்திரம், 10 கை புகை தெளிப்பான் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## துப்புரவுப் பணி

சேலம் மாநகரின் 39 கோட்டங்களில் மாநகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் மூலமும், 21 கோட்டங்களில் தனியார் நிறுவனம் மூலமும் துப்புரவுப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தினசரி சுமார் 335 மெட்ரிக் டன் குப்பை உற்பத்தியாவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. வீடுகள், கடைகள் மற்றும் தெருக்களில் சேரும் திடக்கழிவுகளை தோற்ற நிலையிலேயே மக்கும் மற்றும் மக்கா வகைகளாகப் பிரித்து, பச்சை மற்றும் சிவப்பு கலன்களில் சேகரிக்கப்பட்டு, இதனை மாநகராட்சி லாரிகள் மற்றும் டிராக்டர்கள் ஆகிய வாகனங்கள் மூலம் உரக்கிடங்கிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் தெருக்களில் உள்ள கழிவு நீர் வாய்க்கால்களில் அடைப்புகளை நீக்கி குப்பை, சேறு போன்றவற்றைச் சுத்தம் செய்து கழிவு நீர் தேங்காமல் சீராக வெளியேற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2007–2008 ஆம் நிதியாண்டில் சேலம் மாநகராட்சியில் உள்ள 21 கோட்டங்களின் துப்புரவுப் பணிகள் ஸ்வச்சதா கார்ப்பரேஷன் என்ற தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு ஜூலை 2007 முதல் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் நவீன தானியங்கி துப்புரவு இயந்திரம் பொருத்தப்பட்ட வாகனத்தின் மூலம் சேலம் மாநகரின் முக்கிய தெருக்களை சுத்தம் செய்யும் பணி

துவக்கப்பட உள்ளது. மேலும் முதல் நிலை சேகரிப்பினை மேம்படுத்தும் வகையில் குப்பை தொட்டிகளை அகற்றிவிட்டு அதற்கு மாற்று ஏற்பாடாக டம்பர் தொட்டிகள் 150 எண்ணிக்கைகள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஒத்துழைப்புடன் பல்வேறு விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு சேலம் மாநகரை குப்பையில்லா மாநகரமாக மாற்றி **"எழில்மிகு சேலம்"** என்ற இலக்கை அடைய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பிராணிகள் வதைத் தடுப்பு சட்டம்.

## நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளுதல்

தமிழக அரசு அறிவித்துள்ளபடி நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் தெருவில் சுற்றித்திரியும் நாய்கள் மற்றும் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய நாய் ஒன்றுக்கு ரூ. 445/– வீதம் நடப்பு ஆண்டில் ரூ. 26.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய தேவையான உள்கட்டமைப்பு வசதி ஏற்படுத்தி தனியார் கால்நடை மருத்துவர்கள் மூலம் அனைத்து நாய்களுக்கும் பாதுகாப்பான முறையில் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டு வெறிநாய் தடுப்பூசி போடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## சொர்ண ஜெயந்தி/ நகர்புற வேலைவாய்ப்பு/ பெண்கள் நலத்திட்டம்

இந்திய அரசும், தமிழக அரசும் இணைந்து மாநகர மக்களில் வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்பவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்திட பல்வேறு திட்டங்களை வழங்குகின்றன. அவற்றில் சொர்ண ஜெயந்தி எனப்படும் பொன்விழா கடன் திட்டம், நகர்ப்புற சுயவேலைவாய்ப்புத்திட்டம், நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் போன்றவைகள் மிகவும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் கீழ் தகுதியுள்ள அனைவருக்கும், குறிப்பாக பெண்களுக்குரிய வேலைவாய்ப்பு பயிற்சிகள் அளித்தல், சுய உதவிக் குழுக்கள் அமைத்து செயல்படுதல் என பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் ரூ.13.26 இலட்சம் ஒதுக்கப்பட்டு 370 பயனாளிகள் பலன் அடைந்தனர். அதேபோல நகர்ப்புற வேலைவாய்ப்பு பயிற்சி வழங்கும் திட்டத்தில் ரூ.11.37 இலட்சம் ஒதுக்கப்பட்டு 569 நபர்களுக்கு கணினி பயிற்சி, அழகுக்கலை, ஓட்டுநர், தையல், கைவினைப் பொருட்கள் தயாரிப்பு, உணவு, கைபேசி போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக்காக ஒவ்வொருவருக்கும் ரூபாய் 2000/– வீதம் பயிற்சித் தொகை வழங்கப்பட்டது. வருகின்ற நிதியாண்டில் இவை முறையே ரூ. 15.00 இலட்சமாகவும், ரூ.12.00 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டு அதிகமானோர் பயன்பெற திட்டமிடப்பட்டுள்ளது. நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 58 குழுக்கள் தொடங்கப்பட்டன. ஒவ்வொரு குழுவிற்கும் 50% மானியத்துடன் கடன் வழங்கப்படும். இத்திட்டத்தில் நடப்பாண்டில் 23 குழுக்களுக்கு ரூ.15.72 இலட்சம் மானியமும், ரூ.31.44 இலட்சம் கடனும் வழங்கப்பட்டன. மீதமுள்ள 35 குழுக்களுக்கும் வருகின்ற நிதியாண்டில் கடன் மற்றும் மானியம் வழங்கப்படும்.

மேலும் மாநகரில் 1421 சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவர்களுக்கு கடந்த 10–12–2007 மற்றும் 25–2–2008 ஆகிய தேதிகளில் நடைபெற்ற விழாக்களில் **மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்** அவர்களும், **மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்** அவர்களும், 98 குழுக்களுக்கு ரூ.11.56 இலட்சமும், 100 குழுக்களுக்கு ரூ.10.00 இலட்சமும் சுழல்நிதி வழங்கினார்கள். மீதமுள்ள தகுதியான அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் வருகின்ற நிதியாண்டில் சுழல்நிதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இது தவிர இந்தத் திட்டங்களின் கீழ் அனைத்துப் பணிகளையும் செம்மையாக செயல்படுத்திட உள்கட்டமைப்பை மேம்படுத்த 5 கணினிகள் மற்றும் ஒரு ஜெராக்ஸ் இயந்திரம் ஆகியவற்றை வருகின்ற நிதியாண்டில் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## சொர்ண ஜெயந்தி திட்டம் 2008 – 2009 ஆம் ஆண்டின் உத்தேச மதிப்பீடு விபரம்

### 1. நகர்ப்புற மக்களின் தனி நபர் கடன்

| பயனாளிகளின் எண்ணிக்கை | கடன் தொகை | மானியத் தொகை 15 % |
|---|---|---|
| 650 | ரூ. 3,50,00,000 | ரூ. 52,50,000 |

### 2. நகர்ப்புற வேலை வாய்ப்பு பயிற்சி திட்டம்

| பயனாளிகளின் எண்ணிக்கை | பயிற்சிக்கான தொகை |
|---|---|
| 2100 | ரூ. 42,00,000 |

### 3. நகர்ப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்

| குழுக்களின் எண்ணிக்கை | கடன் தொகை | மானியத் தொகை 50 % |
|---|---|---|
| 175 | ரூ. 4,25,00,000 | ரூ. 2,12,50,000 |

### 4. நகர்ப்புற மகளிர் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள்

| குழுக்களின் எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை | மானியத் தொகை |
|---|---|---|
| 900 | 16,164 | ரூ. 1,61,64,000 |

<u>சொர்ண ஜெயந்தி திட்டம் – பூங்காக்கள் பராமரிப்பு</u>

சேலம் மாநகராட்சியில் பொது உபயோகத்திற்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் ஒரு மண்டலத்திற்கு இரண்டு பூங்காக்கள் வீதம் சொர்ண ஜெயந்தி திட்டத்தின் கீழ் இயங்கிவரும் மகளிர் சுய உதவிக்குழுக்களின் உதவியோடு உருவாக்கவும், பராமரித்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கென முன்வரும் சுயஉதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும் வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தி சேலம் மாநகரின் அனைத்துப் பகுதிகளிலும் பூங்காக்களை ஏற்படுத்தி நல்ல முறையில் பராமரிக்க தொடர்ந்து நிதியுதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

<u>வேலை வாய்ப்பு மற்றும் காலி பணியிடங்களை நிரப்புதல்</u>

**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்** அவர்கள் கடந்த ஆட்சியில் நேரடி நியமனத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை முற்றிலும் நீக்கி அரசாணை (டி) எண். 41 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.4) துறை நாள். 2.2.2007ல் ஆணை பிறப்பித்தார்கள். அதன் அடிப்படையில் சேலம் மாநகராட்சியில் கீழ்க்கண்டுள்ள காலி பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட **மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்** அவர்களின் ஆணையின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | இளநிலை உதவியாளர் / தட்டச்சர் | – 14 |
| 2. | சுருக்கெழுத்து தட்டச்சர் | – 1 |
| 3. | ஓட்டுனர் | – 3 |
| 4. | மருத்துவ அலுவலர் | – 2 |
| 5. | மருந்தாளுனர் | – 7 |
| 6. | பல்நோக்கு சுகாதார பணியாளர் | – 13 |
| 7. | மகப்பேறு உதவியாளர் | – 16 |
| | மொத்தம் | – 56 |

இப்பணியிடங்களை நிரப்பிட சேலம் மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம் வரப்பெற்ற பட்டியலில் உள்ள நபர்களுக்கு நேர்காணல் நடத்தப்பட்டு கீழ்க்கண்ட தகுதியுள்ள நபர்களுக்கு நியமனக் குழுவின் ஒப்புதலுடன் நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

இளநிலை உதவியாளர் / தட்டச்சர் 5 பேரும், பல்நோக்கு சுகாதார பணியாளர்கள் 3 பேரும், மகப்பேறு உதவியாளர்கள் 4 பேரும், ஆக மொத்தம் 12 பேர் நியமனம் செய்யப்பட்டனர். மீதமுள்ள பணியிடங்களைப் பூர்த்தி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<u>ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர் நலன்</u>

அரசாணை எண். 579 நிதித் துறை (ஓய்வூதியம்) நாள் 15.9.2006ன்படி 1.6.1960 முதல் 31.5.1988 முடிய ஓய்வு பெற்ற பணியாளர்களின் ஓய்வூதியம் மற்றும் இறந்தவர்களின் குடும்ப ஓய்வூதியர்களுக்குரிய குடும்ப ஓய்வூதியத்தை திருத்தியமைத்து சேலம் மாநகராட்சியின் 170 ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு நிலுவைத் தொகையான ரூ. 73.00 இலட்சம் தொகைக்குரிய காசோலைகள் 10.12.2007 ஆம் தேதியில் சேலம் நேரு கலையரங்கில் நடைபெற்ற ஓராண்டு சாதனை விழாவில் **மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்** அவர்களால் வழங்கப்பட்டது.

**<u>சேலம் மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிகளுக்காக பெறப்பட்ட தனியார் பங்களிப்பு மற்றும் நன்கொடைகள்.</u>**

1. ஏ.ஆர்.ஆர்.எஸ். மல்டிபிளக்ஸ் தியேட்டர்ஸ் மூலம் ரூ. 15.00 இலட்சம் மதிப்பீட்டில் நீரூற்றுகள், பூங்காக்கள் புதிய பேருந்து நிலைய பகுதியில் அமைத்துத் தர பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2. சேலம் ஸ்டீல் பிளாண்ட் நிர்வாகத்தின் மூலம் ரூ. 3.00 இலட்சம் மதிப்பீட்டில் தலா 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மூன்று எஃகு தொட்டிகள் புதிய மற்றும் பழைய பேருந்து நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

3. சேலம் காந்திரோடு அப்புசாமி மருத்துவனை நிர்வாகத்தின் சார்பில் ரூ. 1.75 இலட்சம் மதிப்பில் புதிய பேருந்து நிலையத்தில் அல்ட்ரா வயலெட்ரேஸ் மற்றும் ஓசோனேட்டர் முறையில் குடிநீரை சுத்தம் செய்து பொது மக்களுக்கு வழங்க ஒரு டிரீட்மெண்ட் பிளாண்ட் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

4. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, செவ்வாய்ப்பேட்டை, மூலம் ரூ. 1.75 இலட்சம் மதிப்பில் புதிய பேருந்து நிலையத்தில் அல்ட்ரா வயலெட்ரேஸ் மற்றும் ஓசோனேட்டர் முறையில் குடிநீரை சுத்தம் செய்து பொது மக்களுக்கு வழங்க ஒரு சுத்திகரிப்பு தொட்டி அமைத்துத் தரப்பட்டுள்ளது.

5. பஞ்சாப் நேஷனல் வங்கி, சேலம், ரூ. 1.75 இலட்சம் மதிப்பில் பழைய பேருந்து நிலையத்தில் அல்ட்ரா வயலெட்ரேஸ் மற்றும் ஓசோனேட்டர் முறையில் குடிநீரை சுத்தம் செய்து பொது மக்களுக்கு வழங்க ஒரு சுத்திகரிப்பு தொட்டி அமைத்து தந்துள்ளது. மேலும் ரூ. 1.10 இலட்சம் மதிப்பீட்டில் மாநகராட்சி மருத்துவமனைகளுக்கு 10 துருப்பிடிக்காத இரும்பு பிரசவ படுக்கைகள், 10 பரிசோதனை படுக்கைகள் ஆகியவற்றையும் வழங்கியுள்ளது.

6. கனரா வங்கி, குகை மற்றும் அழகாபுரம் கிளைகள் சார்பில் மாநகராட்சியின் 7 மேல்நிலைப் பள்ளிகளின் நூலகங்களுக்கு ரூ. 2.50 இலட்சம் மதிப்பில் தளவாடப் பொருட்கள் மற்றும் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

7. இந்தியன் வங்கி மெயின் கிளையின் சார்பில் மாநகராட்சியின் மகப்பேறு இல்லங்களுக்கு 10 இரும்புக் கட்டில்கள், மெத்தைகள் மற்றும் தலையணைகள் வழங்கப்பட்டன.

8. ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர், சேலம் தேர்வீதி கிளையின் சார்பில் மாநகராட்சியின் மகப்பேறு இல்லங்களுக்கு 5 இரும்பு கட்டில்கள், மெத்தைகள் மற்றும் தலையணைகள் வழங்கப்பட்டுள்ளது.

9. ஸ்ரீ ராஜஸ்தானி அசோசியேஷன் ரூ. 25,000/– மதிப்பில் குப்பை சேகரிக்கும் 5 தள்ளுவண்டிகளை மாநகராட்சிக்கு வழங்கியுள்ளனர்.

10. ஸ்ரீ சரவணபவன் குரூப் ஓட்டல், சேலம், ரூ. 25,000/– மதிப்பில் குப்பை சேகரிக்கும் 5 தள்ளுவண்டிகளை மாநகராட்சிக்கு வழங்கியுள்ளனர்.

<u>நமக்கு நாமே திட்டத்தின் கீழ் தனியார் பங்களிப்பு</u>

1. சேலம் மாவட்ட லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர் செவ்வாய்பேட்டை லாரி நிலையத்தில் உயர்மின் கோபுர விளக்கு அமைக்க 1/3 பங்கு தொகையாக ரூ. 2.00 இலட்சம் வழங்கியுள்ளனர்.

2. பள்ளக்காடு ஸ்ரீ நகர் குடியிருப்பு நலச்சங்கத்தின் சார்பில் ஸ்ரீ நகர் பகுதியில் (8 வது கோட்டம்) நூலகக் கட்டிடம் மற்றும் பூங்கா ஏற்படுத்த 1/3 பங்கு தொகையாக ரூ. 2.50 இலட்சம் வழங்கியுள்ளனர்.

3. ஸ்ரீ வள்ளி & கோ, சேலம், நிறுவனத்தினர் குப்பை சேகரிக்கும் தள்ளுவண்டிகள் 50 எண்ணிக்கை வாங்க 1/3 பங்கு தொகையாக ரூ. 75,000/– வழங்கியுள்ளனர்

மாநகர மக்களுக்காக மனமுவந்து உதவிய இந்த நிறுவனங்களுக்கு மாமன்றம் சார்பில் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

2008–2009ஆம் நிதியாண்டிலும் இதுபோல் தனியார் நன்கொடை மூலமும், பங்களிப்பு மூலமும் பல நலத்திட்டப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

## 2008–2009 ஆம் நிதியாண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்

- தற்போது 60 கோட்டங்களாக செயல்படுகின்ற சேலம் மாநகராட்சியினை எதிர்வரும் காலத்தில் 75 முதல் 90 கோட்டங்கள் வரை தமிழக அரசின் அனுமதியுடன் அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- சேலம் மாநகராட்சி சார்பில் பெண்களுக்கான கைவினைப் பயிற்சி நிறுவனம் அமைத்து அதனை படிப்படியாக தொழில்நுட்ப கல்லூரியாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- பழைய பேருந்து நிலையம் மேற்கு பக்கம் விஸ்தரிப்பு செய்து அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- சேலம் திருச்சி மெயின் ரோடிற்கு மாற்றுச் சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- சேலம் மாநகராட்சி அரசு மருத்துவமனை அருகில் உள்ள பெரியார் மேம்பாலம் கீழ்பகுதியில் பூங்கா அமைத்து பராமரிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு திருச்சி மெயின் ரோட்டில் ஜெயா தியேட்டரிலிருந்து சீலநாய்க்கன்பட்டி பைபாஸ் வரை சாலையினை அகலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- அம்மாபேட்டை மண்டல அலுவலகத்தில் வார்டு குழு கூட்டம் நடத்த ஒரு கூட்ட அரங்கு கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்த நிதியாண்டில் இளநிலை பொறியாளர் / சுகாதார ஆய்வாளர் ஆகியோருக்கு ஒருங்கிணைந்த கோட்ட அலுவலகங்கள் 5 எண்ணிக்கையில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு படிப்படியாக கோட்ட அலுவலகங்களுக்கு என தனியாக கட்டிடங்கள் இல்லாத இடங்களில் புதிய கட்டிடங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.
- நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய தார் கலவை கொண்ட பேட்ச்மேட் என்ற பொருளைக் கொண்டு பழுதடைந்த சாலைகளில் ஒட்டு வேலை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- மணியனூர் பகுதியில் உள்ள பழ மார்க்கெட்டை பொது மக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடன் நவீன முறையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய பழமார்க்கெட்டாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- வ.உ.சி. மார்கெட் பகுதியில் உள்ள தினசரி காய்கறி மற்றும் பூ மார்க்கெட், ஔவை மார்க்கெட், சூரமங்கலம் மார்க்கெட் மற்றும் குரங்குச் சாவடி நாளங்காடிகளை அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் புதியதாக 1500 குழல் விளக்குகளும், 300 எண்ணிக்கையில் டி5 (T5) விளக்குகளும் அமைக்கப்படவுள்ளது.

- சீலநாயக்கன்பட்டி ரவுண்டானா முதல் ஆத்தூர் மெயின் ரோடு சந்திப்பு வரை, சேலம் உருக்காலை புறவழிச்சாலையில் மாநகராட்சி எல்லைவரை உள்ள பகுதிகளில் டி5 (T5) விளக்குகள் ரூ.70.00 இலட்சம் செலவில் பொருத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- கன்னங்குறிச்சி மூக்கனேரி, பனமரத்துப்பட்டி ஏரி ஆகியவற்றை அபிவிருத்தி செய்து பூங்கா, ஏரிக்கரைகள் அமைத்தல் மற்றும் ஏரியினை ஆழப்படுத்தி சுற்றுலாத்தலமாக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்தைச் சேர்ந்த கோட்டம் எண். 55, 58, 59, 60 ஆகியவைகளை இணைக்கும் அம்மாள் ஏரி ஓடையை சீரமைத்து அமானி கொண்டலாம்பட்டி காட்டூர் ஏரியில் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- அழகாபுரம் புதூர் ராஜவாய்க்கால் ஓடை, டி.வி.எஸ் ஓடை மற்றும் சாமிநாதபுரம், ஆர்.டி.பால். தெரு ஓடைகளை சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- அம்மாப்பேட்டை ஏரியின் கரையை பலப்படுத்தவும், அம்மாப்பேட்டை ஏரியில் கழிவு நீர் கலக்காமல் தடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

- 6வது கோட்டம் மற்றும் 7வது கோட்டத்தினைச் சார்ந்த ஓடையை மூக்கனேரி மற்றும் கொல்லங்குட்டை ஏரியில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- சாரதா கல்லூரி அருகில் சாலையினைக் கடக்க பாதசாரிகள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையிலும், 4ரோடு பகுதியில் உள்ள பாதைகளை கடந்துச் செல்ல பாதசாரிகள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையிலும் தனியார் பங்களிப்புடன் சுரங்கப்பாதை (சப்–வே) அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- முக்கிய ரவுண்டானாக்கள் மற்றும் 3 ரோடுகள் சந்திக்குமிடங்களில் தனியார் பங்களிப்புடன் உயர்மின் விளக்குகள் (High Mast Lamps) நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- சேலம் சந்திப்பில், போடிநாயக்கன்பட்டி மற்றும் ஆண்டிப்பட்டி பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று 244 என் கொண்ட குறுகிய சுரங்கப்பாதையை அகலப்படுத்திட இரயில்வே துறையுடன் இணைந்து செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- கோட்டை பழைய இரும்பு கடை பகுதியில் வணிக வளாகம் கட்டவும் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- புதிய பேருந்து நிலையத்தில் நவீன முறையில் கோபுர கடிகாரம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- புதிய பேருந்து நிலையத்தில் மல்டி லெவல் பார்கிங் (Multi-Level parking) அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- அரசு போக்குவரத்து கழகம் மூலம் பொதுமக்கள் நெரிசலை குறைக்கும் பொருட்டு முக்கிய தடங்களில் இரண்டு அடுக்கு பேருந்து விட அரசை கோர உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- சேலம் மாநகரில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு மாநகர பகுதிகளை இணைக்கும் வகையில் பறக்கும் இரயில் திட்டத்தினை (மெட்ரோ இரயில்) செயல்படுத்த அரசு மற்றும் இரயில்வே துறையை கோர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- புதிய மற்றும் பழைய பேருந்து நிலையங்களில் பொதுமக்கள் வசதிக்காக கைப்பேசிக்கு மின்சாரம் சார்ஜ் செய்யும் கருவி பொருத்தப்படும்.
- கோட்டை மாரியம்மன் கோவில் அருகில் திருமணிமுத்தாற்றின் மீது (Single Deck) (Car Parking) வாகனங்கள் நிறுத்த வசதி ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- ஆற்றோரம் மார்க்கெட்டை அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- வங்கிகள் மூலம் வரி செலுத்தும் வசதியை இந்த நிதி ஆண்டில் துவக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- தாதகாப்பட்டி கேட் அருகில் உள்ள காலி இடத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய நகரப்பேருந்து நிறுத்தம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- மணியனூர் வீட்டுவசதி வாரிய பகுதியில் புதியதாக நவீன வசதிகளுடன் கூடிய சமுதாயகூடம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- மணியனூர் – பைபாஸ் ரோடு, ராமலிங்கம் மார்க்கெட் – லீபஜார் சாலை ஆகியவற்றை விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- செவ்வாய்ப்பேட்டை லாரி மார்க்கெட் பகுதியை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
- செவ்வாய்பேட்டை அண்ணா மேம்பாலத்திலிருந்து வெங்கடப்பன் சாலைக்கு செல்வதற்கு பால் மார்க்கெட்டை சுற்றி செல்ல வேண்டியுள்ளது. இதனால் மிகவும் போக்குவரத்து நெரிசலும், பொதுமக்களுக்கு இடையூராகவும் உள்ளது. இச்சிரமத்தை போக்கும் பொருட்டு அண்ணா மேம்பாலத்திலிருந்து வெங்கடப்பன் சாலைக்கு நேரடியாக செல்வதற்கு ஒரு இணைப்பு பாலம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- சூரமங்கலம் வார்டு அலுவலகம், அம்மாப்பேட்டை வார்டு அலுவலகம், கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம் ஆகிய பகுதிகளில் தனியார் பங்களிப்புடன் மின்மயானம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- கோரிமேடு முதல் செட்டிச்சாவடி வரை குழல் விளக்குகள் பொருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- மாநகராட்சிப் பணியாளர்களுக்கு மனித வள மேம்பாட்டுப் பயிற்சி (Human Resource Develoment Training) வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- மைய அலுவலகம் மற்றும் 4 வார்டு அலுவகங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க சுத்திகரிப்பு இயந்திரம் (Treatment Plant) அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- சேலம் மாநகராட்சியின் பிரதான பகுதியில், வருவாய் தரத்தக்க இனத்தின் கீழ் (Remunerative Enterprises Scheme) பல மாடி கட்டிடம் கட்டி அதை வங்கிகள், மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் அரசு சார்பு நிறுவனங்களுக்கு தளம் அடிப்படையில் (Floor Basis) குறிப்பிட்ட கால அளவிற்கு வாடகைக்கு விட நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- மாநகராட்சி பொது நிதியிலிருந்து மாநகராட்சி எல்லைக்குள் வசிக்கும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களில் வருடத்திற்கு 4 நபர்களின் இருதய சிகிச்சைக்கு மருத்துவ நிதி உதவி செய்ய அரசின் உரிய அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.
- பொதுமக்கள் கைப்பேசி மூலம் (எஸ்.எம்.எஸ்) புகார்களை அனுப்ப உரிய வசதிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- திட்டப் பணிகளை செயல்படுத்தும்போது ஏற்படும் அசாதாரண நிகழ்வுகளை சமாளிக்க அவசரகால நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
- தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை மற்றும் **மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்** அவர்களின் உள்ளாட்சித் துறை சம்மந்தமான அறிவிப்புகளில் உள்ள திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம், குறிப்பாக சேலம் மாநகரம் நமது ஒப்பற்ற **தமிழினத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களை தாலாட்டி வளர்த்த நகரமாகும். நமது மாநகராட்சி கட்டிடம் அமைந்துள்ள இதே கோட்டை பகுதியில் அவர் குடியிருந்த வரலாறு நாம் அனைவரும் அறிவோம். அத்தகைய பெருமைமிகு மாநகரத்திற்கு தாயுள்ளத்தோடு, தமது நன்றியை தெரிவிக்கும் விதமாக பல்வேறு 'மெகா' திட்டங்களை அறிவித்து அவற்றின் தொடக்க விழாவிலும் கலந்து கொண்டு சிறப்பித்த நமது **மாண்புமிகு முதல்வர்** அவர்களுக்கு மாநகர மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல ஒட்டுமொத்த உள்ளாட்சியில் நல்லாட்சி நடந்திட வழிகாட்டியாய் திகழும் **மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திருமிகு தளபதியார்** அவர்களுக்கும்,

மாநகர வளர்ச்சியின் ஒவ்வொரு அங்குலத்திலும் தனது பங்கை செலுத்தி இரவு பகல் பாராமல் நமக்காக உழைத்துக் கொண்டிருக்கும் **மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திருமிகு வீரபாண்டியார்** அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நல்ல பணிகளை நிறைவேற்றிட ஆக்கமும், ஊக்கமும் தந்து நமக்காக பாடுபடும் மரியாதைக்குரிய **சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர்** அவர்களுக்கும், **சேலம் நாடாளுமன்ற உறுப்பினர்** அவர்களுக்கும், **வீரபாண்டி சட்டமன்ற உறுப்பினர்** அவர்களுக்கும், **பனமரத்துப்பட்டி சட்டமன்ற உறுப்பினர்** அவர்களுக்கும், **சேலம்–1 சட்டமன்ற உறுப்பினர்** அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநகர மக்கள் சேவையில் ஆற்றிவரும் பணிகள் தனிமனிதரால் செய்யும் சாத்தியமில்லை. இது ஒரு கூட்டு முயற்சி. இந்த முயற்சியில் எனக்கு உறுதுணையாக இருந்து வரும்,

வணக்கத்திற்குரிய துணை மேயர் அவர்களுக்கும்,

மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கும்,

மாநகராட்சி மன்ற ஆளும் கட்சித் தலைவர் அவர்களுக்கும்,

மாநகராட்சி மண்டலக் குழு தலைவர்களுக்கும்,

மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும்,

மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர்களுக்கும்,

மாமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும்,

மாநகராட்சியின் செயற் பொறியாளர்கள், மாநகர நல அலுவலர், உதவி ஆணையாளர்கள் உள்ளிட்ட அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், மாநகர காவல்துறை ஆணையாளர் மற்றும் காவல் துறையினருக்கும், அரசு துறையின் அனைத்து அலுவலர்களுக்கும், பத்திரிக்கையாளர்கள் மற்றும் தொலைக்காட்சித் துறையினருக்கும் எனது உளமார்ந்த நன்றியினை உவகையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்"

என்ற அய்யன் வள்ளுவப் பெருந்தகையின் வழியில் நின்று அறிவும் திறனும் கொண்ட மூத்தவர்களாகிய உங்கள் துணையுடன் மாநகராட்சியின் மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையிலும், அவர்களின் நன்மதிப்பையும், பாராட்டையும் பெறும் வகையிலும் தொடர்ந்து பணியாற்றுவோம். அதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவதற்கு உங்கள் ஒத்துழைப்பை தருமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன்.

நமது பணியை தொடர்ந்திட துணை நிற்கும் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறி எனது நிதி நிலை அறிக்கை உரையினை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

ஜெ. ரேகா பிரியதர்ஷினி,
வணக்கத்திற்குரிய மேயர்
சேலம் மாநகராட்சி

சேலம்
17-03-2008